# திராவிடநாடு



# திராவிடத்தின் நீர் வளம்

[ புலியரசு ]

திராவிடநாடு போன்ற ஓர் பரந்த நிலப்பரப்பு இந்திய உபகண்டத்தினின்றும் பிரிந்து தனியரசாய் மலரும் அளவுக்கு தேவைப்படும் வளங்கள் நிறைந்துள்ளனவா! என்பது அரசியல் பொறுப்பிலுள்ள பலரின் ஐயமாகும். ஆனால் அவ்வையப்பாட்டைப் போன்று திராவிடம் வரண்ட வளமற்ற பகுதியா என்றால், இல்லை எனலாம்.

பல்வளம் மிக்கது தென்னகம் என்பதைப் புள்ளி விபரங்களோடு காட்டும் வாய்ப்புள்ளது. ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு—தனித்தியங்குதற்கு—தேவைப்படும் வளங்கள் பல. அவற்றில் முறையே திராவிடம் நில, நீர், கனிச் செல்வ வளங்களைப் பெற்றிருப்பதில் உலகின் மற்றெந்தப் பகுதியையும்விட குறைந்ததல்ல. கனிச்செல்வ வளத்தில் உலகின் தேவையையே பூர்த்தி செய்யும் அளவுக்குச் சிறந்த நிலையில் உயர்ந்து நிற்கின்றது. நிலவளச் சிறப்பில் சீனமும் சியாமும் இந்நாட்டிற்கிணையாகா. நீர் வளச் சிறப்போ விளக்கின் விரியும். எனினும் சுருக்கமாய் ஆய்வோம்.

இந்நாட்டின் பொருளாதாரம் பயிர்த்தொழிலையே முற்றிலும் கொண்டு நிர்ணயிக்கப்பட வேண்டியதாகும். திராவிடத்தின் பெரும் பகுதி மக்களின் வாழ்வு பயிர்த் தொழிலோடு பின்னப்பட்டதாகும். அவ்வுயிர்த் தொழில் வாழ அத்தியாவசியத் தேவைகளில் ஒன்று நீர் வளமாகும்.

சரித்திர காலந்தொட்டு நம்நாட்டில் கோலோச்சிய மன்னர் பல்லோர் இந்நீர் வளப்பெருக்கில் பெரும் பணியாற்றியுள்ளனர் என்பது சரித்திரச் சான்றாகும். அப்பொன் நாட்களில் சோழன் கட்டிய அணைக்கட்டுகளும் பாண்டியர் அமைத்த நீர்த்தேக்கங்களும் உலகம் வியக்கும் பெருஞ்சாதனைகளாகும். நம்மரும் நாட்டை வளநாடாக்கும் பெருந்தொண்டினை மேற்கொண்டுள்ள நதிகள் பல. அவற்றில் துங்கபத்திரா, கிருஷ்ணா, கோதாவரி, காவிரி, வைகை, தாமிரவருணி, பெண்ணை போன்ற ஜீவநதிகள் குறிப்பிடத்தக்கனவாகும்.

உலகில் மற்றெந்த நாடுகளையும் விட திராவிடம் சராசரி ஓர் சதுர மைல் பரப்பளவில் எண்பது சதவிகிதத்திற்கு மேற்பட்ட அளவு நீர்ப்பாசன வசதியைப் பெற்றுள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலையினின்றும் உற்பத்தியாகி ஆண்டு பூராவும் ஓடி கடலிலே கலக்கும் பல நதிகளில் அணைகளைக்கட்டி நீரைத்தேக்கி பயிர்த் தொழிலுக்கு பயன்படுத்துவது ஒருமுறை. அவ்வணைகளினின்றும் நீர் பாய்ந்து சமவெளியை அடையுமுன் அதன் வேகத்தைத்தடுத்து மின்சக்தியை உற்பத்தி செய்வது மற்றோர் முறை. இதன் மூலம் நீர் பயிர்த் தொழிலுக்குப் பயன்படுவதோடு அது தரும் மின்சக்தி இயந்திரங்களை இயக்கவும் பயன்படுகின்றது. அவ்வாறாயின் ஓர் அரசின் பொருளாதாரம் இருவகையில் உயருகிறது. ஒன்று விவசாயம்; மற்றொன்று தொழில் முன்னேற்றம்.

திராவிடத்தினூடே பாயும் நதிகள் இவ்விருவகையிலும் பயன்தரத்தக்கனவாம். இவற்றில் தலையாயது துங்கபத்திரா.

நம் நாட்டில் பாயும் ஜீவநதிகள் பலவற்றை உற்பத்தி செய்யும் பெரும் பொறுப்பை மேற்குத் தொடர்ச்சி மலைகள் மேற்கொண்டுள்ளன. திராவிடத்தின் உயிர் நதிகளில் தலையாயதான துங்கபத்திரா மைசூர் மாநிலத்திலுள்ள "வரக பர்வதம்" என்றழைக்கப்படும் மேற்குத் தொடர்ச்சி மலைப் பிரிவில் துங்கா, பத்ரா என்ற இரு சிறு நதிகளாக உற்பத்தியாகி குடலி என்னும் சிற்றூருக்கருகில் இணைந்து துங்கபத்திரா என்ற பெயர் பெற்று 400 மைல்களுக்கு மேல் மைசூர், ஆந்திரா சமவெளிப் பிரதேசத்தினூடே பாய்ந்து ஆந்திர மாநிலத்தில் ஓடும் பெருநதி கிருஷ்ணாவோடு கலக்கின்றது.

துங்கபத்திரா சற்றேறத்தாழ 26,858 சதுர மைல் பரப்பளவுள்ள நிலப்பரப்பை சாகுபடிக்குகந்ததாகச் செய்கின்றது. அதாவது அல்பேனியா, இலங்கை போன்ற நாடுகளின் பரப்பளவு அளவுக்குப் பாய்கின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும். துங்கபத்திரா பாயும் சமவெளிப் பகுதியின் பரப்பளவை மட்டுமே தன்னாட்டின் பரப்பளவாகக் கொண்ட நாடுகள் யாவும் இன்று தனி நாடுகளாய்த் திகழ, திராவிடம் இன்னும் அடிமைக்காளாகிக் கிடப்பது விந்தையே.

துங்கபத்திரா கரையோரப் பகுதி பல பெரும் திராவிட சாம்ராஜ்யங்களின் விளைநிலமாக இருந்திருக்கின்றது. இதில் குறிப்பாக விஜய நகர சாம்ராஜ்யம் வளர்ந்ததே துங்கபத்திராக் கரையில் தான். பல பெரும் போர்க்களங்களாகவும், நீரரணாகவும் இருந்து சிறப்புற்ற நதிகளில் துங்கபத்திரா முதன்மையானதாகும்.

இயற்கையிலேயே வரண்ட பாலைப் பகுதியான இராயலசீமைப் பகுதியில் பாய்ந்து உயிரளிக்கும் துங்கபத்திரா சில வினாடிகளுக்கு பல்லாயிரக் கணக்கான 'கியூசெக்'குகள் நீரோட்டம் கொண்டிருப்பதால், அப் பெருவோட்டத்தைத் தடுத்து நிறுத்தி, நிறுத்தப்பட்ட நீரைப் பரவலாகப் பயன்படுத்தி இலட்சக்கணக்கான ஏக்கராக்கள் வளமற்ற நிலத்தை சாகுபடிக்கேற்றதாக்குவதோடு, அந்நீரோட்டத்தினின்றும் நீர் மின்விசை உற்பத்தி செய்து தொழில் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தவும் வழியுள்ளது என்ற எண்ணத்தைத் தோற்றுவித்த பெருமை சர். ஆர்தர் காட்டன் அவர்களையே சாரும்.

இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் துங்கபத்திராவில் மல்லாபுரம் என்னும் இடத்தில் அணைகட்டி நீரைத் தேக்க திட்டமிடப்பட்டது. ஆனால் சென்னை அரசினர் காவிரி, கிருஷ்ணா போன்ற நதிகளில் நீர்த் தேக்கங்கள் அமைக்கும் பணியினை மேற்கொண்டிருந்தமையாலும், துங்கபத்திரா நீர்த்தேக்கத் திட்டத்திற்கு பல கோடி ரூபாய்கள் தேவைப்பட்டமையாலும் அத்திட்டம் ஏட்டளவிலேயே நின்றுவிட்டது.

மீண்டும் 1930-ம் ஆண்டு மல்லாபுரத்திற்குச் சற்றுத் தொலைவில் உள்ள திம்மலாபுரம் என்னும் இடத்தில் மாற்றுத் திட்டம் தீட்டி வேலைகள் ஆரம்பமாயின. அதே போது அவ்வணையினை ஐதராபாத் மாநிலத்திற்கும் பயன்படும் வகையில் மல்லாபுரம் வரை நீடித்துக் கட்ட எண்ணி ஐதராபாத் மாநில சர்க்கார் முன்னாள் சென்னை (ஆந்திர பிரிவினைக்கு முன்) சர்க்காரோடு பேச்சு வார்த்தைகள் நடத்தி இறுதியில் 1944–45ம்

(19-ம் பக்கம் பார்க்க)

# நமது அஞ்சலி

மலர் 15 ] ஆண்டுச் சந்தா ரூ. 7 [16–12–56] தனிப் பிரதி 2 அணு [ இதழ் 24

நம்ப முடியவில்லையே, நான் நேற்றுப் பார்த்தேனே, இராஜ்ய சபைக்கு வந்திருந்தாரே, நண்பர்களுடன் சிரித்துப் பேசி மகிழ்ந்த காட்சியைக் கண்டேனே என்று டில்லி வட்டாரம் கூற, "எமது பாபா போய்விட்டார்!" என்று மராட்டியம் கதற; இடி விழுந்ததுபோல எண்ணற்ற இளைஞர்கள் சோகத்தால் தவிக்க; இந்திய உபகண்டத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் ஒண்ட இடமும் உடுக்க முழமும் இன்றி அவதியடையும் பழங்குடி மக்கள் எலாம் பகலவன் மறைந்துவிட்டது போன்று திகைக்க, அண்ணல் அம்பேத்கார் அவர்களின் கடைசி மூச்சு காற்றோடு கலந்து ஒரு கிழமை ஓடிப்போய்விட்டது! இதயத்தைத் தாக்கிய இத்தகவல் எட்டுவதற்கு இருதினங்களுக்கு முன்புதான், கரத்திலே மலரும் முகத்திலே களிப்பும் தவழ, சிரம் வணங்கி நாகபுரியிலே அவர் புத்த மார்க்கத்தில் சேர்ந்த புனிதக் காட்சியினைச் செய்திப் படத்தில் கண்டோம் — அவரோடு, மூன்று இலட்சம் மக்கள் புத்தரின் போதனைக்காகப் பாடுபடக் கிளம்பியிருக்கின்றனர் எனும் ஆனந்தத்திலாழ்ந்தோம் இன்னும் பல இலட்ச மக்கள், சாதிபேதத் தளைகளை விட்டொழித்து சன்மார்க்கம் போதிக்கும் திருப்பணியின் சின்னமாக அம்மதத்தில் சேரவிருக்கிறார்கள் எனும் சிந்தை மலர்விக்கும் செய்திகளையும் ஏடுகளில் கண்டுகொண்டிருக்கும் நிலையில் திடீரென அந்தச் சிந்தனையாளர், செயற்கரிய செய்த பெரியார், பழங்குடி மக்களின் பாதுகாவலர் போய் விட்டார்! நம்மை யெல்லாம் விட்டு, போய்விட்டார்!

அம்பேத்கார் அவர்கள் இருந்த இடமும், தூரமும் மிக அதிகம். எனினும், இங்கு பற்பல இடங்களில், 'அம்பேத்கார் மன்றம்' என்றும், 'அம்பேத்கார் படிப்பகம்' எனவும், 'அம்பேத்கார் படத்திறப்பு!' என்றும், அவரது பெயரைச் சொல்லிச் சொல்லி உவகை கொள்வதுண்டு நாம். எங்கோ பிறந்து, எப்படியோ படித்துப் பட்டம் பெற்று, எவ்வளவோ பதவிகளையும் பாராளும்பொறுப்பினையும் ஏற்றிருந்த போதுகூட அவருக்குத் தான் பிறந்த குடிமீது நீங்காப்பற்றுகொண்டு, கேடுகெட்ட நிலையினின்றும் மீண்டும் புது உரு பெறவேண்டு மெனும் ஆசையும் கொண்டவராக அரும் பெரும் பணிகளைச் செய்தார், என்பதுதான். இந்துமதக் கொடுமைகளின் நிலைக்களனாக விளங்கும் இந்தப் பரந்த பூபாகத்தில், எங்ஙனம் திரு இடம், அயலார்தம் கொள்கைக்கு ஆட்பட்டு அழிந்ததோ அதுபோலவே இந்த உபகண்டத்தின் ஒவ்வொரு பகுதியிலுமிருந்த ஆதிமக்கள் ஆரியக் கொள்கைகளால் அடிபட்டு, மிதிபட்டு, அடிமைகளாய்க் கருதப்பட்டு, அமுக்கப்பட்டனர்! அப்படிப்பட்டோருக்காக, வாதாடி ஓரளவு வெற்றியைப் பெற்றவர், அம்பேத்காராகும். அரசியலில் இன்று ஒரு சிவசண்முகம் டில்லி சர்வீசு கமிஷனில் இருக்கவும், ஜகஜீவன்ராம்கள் அமைச்சர்களாக அமர்ந்திருக்கவும், மரகதம் அம்மைகள் 'தனித் தொகுதி' மூலம் பாராளும் சபைக்குச் செல்லவும், நிலைமை வளர்ந்திருக்கிறதென்றால் அந்தப் பணியின் பெரும்புகழ், அம்பேத்கார் அவர்களையே சாரும்.

வாயிருந்தும் ஊமையாய், கண்ணிருந்தும் குருடராய், காலிருந்தும் நொண்டிகளாய் சமூகத்தில் கருதப்பட்டு வருகிற பழங்குடி மக்கள் இந்து சமூகத்தில் படும்பாட்டினைக் கண்டு பீவர்லி நிகோலஸ் போன்ற வெள்ளை எழுத்தாளர்கள் மனம் வெதும்பி எழுதினர்- ஆண்ட வெள்ளையனும் 'அநியாயம் இது' என்று உணர்த்தப்பட்டபோது, அதனைத் துடைக்கத் தன்னாலான முயற்சிகளைச் செய்ய முயன்றான். அதுபோதெல்லாம், உயர்சாதிக்காரர்கள் எழுப்பிய உறுமல்களை எதிர்த்து நிற்க அம்பேத்கார் போன்றார் இல்லாதிருந்தால், இன்று கிடைத்திருக்கும் பல உரிமைகள் பறிக்கப்பட்டே போயிருக்கும்!!

பழங்குடி மக்களின் கேடுற்ற நிலைகண்டு, அப்போதைய காங்கிரசின் தலைவர்களில் சிலருக்கு, அனலும் புனலும் வழிந்ததுண்டு. ஆனால், அந்த அக்கிரமத்தைக் கண்டித்தால், எங்கே தேசீய இயக்கத்துக்குத் திரள வேண்டிய சக்தி சிதறுண்டு போய்விடுமோ எனும் கலக்கத்தில் அவர்கள் பூசியும் மெழுகியும் வந்த காலம் அது. 1918ல் பம்பாயில் பரோடா மன்னர் தலைமையில் அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் மாநாடு கூடியபோது, காங்கிரஸ் கேசரி திலகர் கர்ச்சித்தாராம், "கடவுளாக இருந்தாலும் அவர் தீண்டாமையை அனுமதித்தாரானால், அவரைக் கடவுள் என்று நான் கூறமாட்டேன். எப்படியோ, முற்காலத்தில் சில பிராம்மணர்களால் இந்தப் பழக்கம் புகுத்தப்பட்டு விட்டது. தீண்டாமை ஒரு கொடிய நோய்; அது ஒழிக்கப்படவேண்டும்," என்று. இப்படிக் கர்ச்சனை எழுப்பிய அவரிடம் மாநாட்டு முடிவில் "அகில இந்திய தீண்டாமை மறுப்பு அறிக்கை" என்று ஒன்று தயாரித்து அவரது கையெழுத்தையும் கேட்டனர் மாநாட்டினர். மறுத்துவிட்டாராம் திலகர்! "என் வாழ்வின் முக்கிய இலட்சியம் தீண்டாமையை அகற்றுவதே" என்று வாழ்

வெல்லாம் கூறிய காந்தியடிகளே, தன்னுடைய இலட்சியத்தைச் சாதிக்க, இந்நாட்டு பழங்குடி மக்களுக்கு, ''ஹரிஜனர்,'' என்ருெரு புதுப்பெயர் கொடுக்கவேண்டியிருந்தது, அதன்மூலம் பழமை விரும்பிகளின் கண்களுக்குத் திரைபோட நேர்ந்தது, என்ருல் அப்போது இருந்த அச்சமும் திகிலும் சாமான்யமானதென்று கூறமுடியாது! அம்பேத்கார் போன்றவர்கள் இல்லாதிருந்திருந்தால், தமது குடிக்கு நியாயம் தேட, கடுமையான வாதங்களேயும், காரசாரமான தாக்குதல்களேயும் மேற்கொள்ளாமலிருந்திருந்தால், பழங்குடி மக்கள் எங்குபோயிருப்பார்களோ.

ஒரு சமயம், அம்பேத்கார் கோரியதுபோல தாழ்த்தப்பட்டவர்களுக்கு எனத் தனித்தொகுதி முறையை அமைக்கப் பிரிட்டிஷார் ஒப்புதல்தரும் வேளேயில், உத்தமர் காந்தியடிகள், ''கூடாது. கூடாது. அவர்கள், எனது அங்கம். அந்த அங்கத்தை, இந்த முறையால் பிரிப்பதா? ஒப்பேன்! உண்ணுவிரதம் மேற்கொள்வேன்!'', என்று எதிர்த்தபோது, துளியும் பணியாது உறுதியோடு இருந்தவர், அம்பேத்கார். இந்த உறுதியினேயே, பாராளும் சபையில் அம்பேத்கார் அவர்கட்கு அனுதாபம் தெரிவித்தபோது கூட நேரு பண்டிதர், குறிப்பாகக் கூறிஞர்—''அவர், பலருடைய மனம் புண்படும் விதத்தில் பல சமயங்களில் நடந்துகொண்டிருக்கலாம். ஆனுல், அது அத்தனேயும் நீதி மறுக்கப்பட்ட ஒரு சார்பாருக்கு நியாயம் பெறவே தவிர, வேறு அல்ல'' என்று. இந்த உண்மையினே, அம்பேத்காரின் பணியினேக் குறைத்துப் பேசிய இந்து மகா சபையினரும், வகுப்புவாதி என்று வர்ணிக்கும் கம்யூனிஸ்டுக் கட்சியினரும், ஏனேய பிறரும் இன்று ஏற்காமலிலலே. அனேவரும், ஒரே குரலில், அம்பேத்கார் அவர்கள் பழங்குடி மக்களுக்குப் பணியாற்றிய ஒப்பற்ற தலேவர் என்பதை வாயாரக் கூறிடக் கேட்கிறேம். இந்தளவுக்குக் கூறக் காரணம், அம்பேத்கார் அவர்கள், எப்பதவி வகித்த போதினும், தன்னுடைய சமூகத்தை மறந்துவிடாமல், அதற்கு நீதிபெறப் போராடுவதில், சிறிதும் விட்டுக்கொடாமலிருந்ததுதான்!

பெரிய தலேவராளுலும் உலகமே போற்றும் உன்னத நிலேயிலிருந்தாலும் எனக்கென்ன, எனது சமூகத்துக்கென்ன—அதைப்பற்றி முதலில் பேசு, என்று ஒரே பிடிவாதமாக இருந்த காரணத்தால்தான், அவரையே மாற்ருர் எனத் தெரிந்தும், இந்திய அரசியலமைப்பைத் தயாரிக்கும் பெரும் பொறுப்பில் அமர்த்திஞர் நேரு பணடிதர். எங்கே இவரும் 'ஜோதி'யில் கலந்து, இதுகாறும் பழங்குடி மக்கள் அனுபவித்த சலுகைகளேயும் தத்தம் செய்துவிடுவாரோ என்று பலர் அச்சப்பட்டனர். ஆயினும், அவர், பழங்குடி மக்களுக்கிருந்த 'தனித்தொகுதி' முதலியவைகளே விட்டுவிடாமல் பெற்றுக்கொண்டார்! இப்படி உறுதியோடும் ஒரே மூச்சோடும் இந்நாட்டுப் பழங்குடி மக்களுக்கு நீதிதேடிடும் சீயமாக இவர் இருந்ததால்தான், அதே கொள்கைக்காகப் போராடிய நீதிக் கட்சியின் வழிவந்த நமக்கும், அம்பேத்கார் எனும் திருநாமமே தித்திக்கிறது.

அத்தகைய ஒரு வீரர் இழிவு துடைக்கத் தன் வாழ்நாள் முழுவதும் போராடிய ஒரு உத்தமர், அரசியல் துறையில் சலுகைகள் பல அடைந்திடினும் இந்து சமூகத்தில் ஒரு அங்கம் என்றுகூறிக்கொண்டிருக்கும் வரையில் நமக்கு உயர்நிலே கிடைக்காது-இந்து மதம், வர்ணுச்சிரமிகளின் கூடாரம் அங்கே ஒருபோதும் சமதர்மம் தழைக்காது எனக்கண்டு, அன்புமதமாம் புத்தத்தோடு சேர்ந்தாவது புதுவாழ்வு காண்போம் என்று முயன்ற ஒரு நல்லவர், நம்மை யெல்லாம் விட்டுப் போய்விட்டாரே என்று நினேக்கிறபோது நம்மிலொருவரை இழந்துவிட்டோமே என்கிற ஏக்கமும் துக்கமும் எழுகிறது.

மராட்டியத்தில் தாழ்ந்த குலமாகக் கருதப்படும் 'மஹரா'கப் பிறந்தாலும், டாக்டர் அம்பேத்கார் அவர்கள் இந்தியாவில் வாழும் எட்டுக் கோடி பழங்குடி மக்களுக்கும் நல்வாழ்வுபெறப் பாடுபட்டார். பழங்குடி மக்களுக்காகவே பணியாற்றும் இயக்கத்தைச் சார்ந்தோர் நாம், அவரைப்போல இங்கும் அக்கிரமங்களே ஒழிக்கப் பாடுபட்டுக்கொண்டு வருவோர் நாம், என்பதால் அவருடைய மறைவு, நமக்கு அளவிலாத துயரைத் தருகிறது, அம்பேத்கார் அவர்களுக்கு தென்னகத்தில் இருப்பதைப் போல உருவான இயக்கம் அமையவில்லே! ஆனுல், இங்கே, நாம் இருக்கிறேம் — இரட்டைமலே சீனிவாசன் போன்ற மறைந்த பழங்குடி மக்களின் தலேவர்களின் வழித்தோன்றல்கள் ஏராளம் இருக்கிருர்கள். அவர்களனேவரும், தென்னகத்தில், அன்பு மார்க்கத்தை நிலேநாட்டவும், அதன் அடிப்படையில் புதியதொரு அரசை நிறுவவுமான, இலட்சியத்தில் ஈடுபட்டுள்ளார்கள். அவர்களால் நிச்சயம் வீழ்ந்தோரை, வாழச்செய்ய இயலும். அண்ணல் அம்பேத்கார் போன்ரேர் தமது வாழ்நாளில் காணவிரும்பிய புத்துலகை நிச்சயம் உருவாக்கியே தீருவார்கள்! அந்தஉத்தமக்கூடாரமாம் தி. மு. க-வின் எண்ணற்ற இதயங்களின் சார்பில், மறைந்த மாவீரருக்கு அஞ்சலி செய்கிறேம்—அவருடைய பிரிவால் வருந்தும் சகோதரர்களுடைய துயரத்தில் நாமும் பங்குகொள்கிறேம். வாழ்க அவர் திருநாமம்! வளர்க, நன்னெறி!!

★

# சுடர் அணேந்தது!

என்னவென்போம்! இனி என்று காண்போம்!!— என்று ஏங்குகிறேம். தென்னகத்துக்கே உரித்தான அரும்பெரும் கலேயான நாதஸ்வரத் துறையின் ஒப்பிலா மாணிக்கம், முடிசூடா வேந்தர், நட்பிற்கோர் அணிகலம், நமது அரும்பெரும் கலே மன்னர் திருவாவடுதுறை டி. என். இராசரத்தினம் அவர்கள் 12ந் தேதியன்று, காலமானுர் என்கிற சேதி கேட்டு நம்மால் நம்பவே முடியவில்லே.

ஒருமுழுமதி போய்விட்டதே!-இனி என் செய்வோம்!! உள்ளத்தை உருக்கும் 'தோடி'யும், குழல் வழியே வழிந்தோடுமே அந்த இன்னிசையையும், இனி எங்கே கேட்கப் போகிறேம்? ஜொலிக்கும் அந்தச் சிங்கார முகத்தை இனி நாம் காண முடியாதா! ஏதும் புரியவில்லே, நமக்கு-ஏங்கும் கலே உலகுக்கும், நமது நண்பர்களுக்கும், அவர்தம் உற்ருர் உறவினர்களுக்கும் எப்படி ஆறுதல் கூறுவோம்? ஐயோ! இரத்னமே—இசையுலக ராஜா, இனி எப்போது காணப்போகிறேம் உமை! திருச்சி மாநாட்டிற்கு வந்து, வருங்காலத் திராவிடத்தைக் கண்டு பூரித்துப்போனுயே-தமிழ்ச் செல்வமே!—சற்றும் எதிர்பார்க்கவில்லேயே நாங்கள், இயற்கை இவ்வளவு சீக்கிரம், சதி செய்யுமென்று? யாரை நோவோம்! யாரை யார் தேற்றிக்கொள்வது.

★

# செல்வக்காடு—
# தேயும் நாடு!

**'பிரகாசா' படப்பிடிப்பு**

"அக்கிரமக்காரனய்யா அவன்! இப்படி அவன் துன்பப்படவேண்டியதுதான்."

*

"சோம்பேறிப் பயல்! எப்படி வாழ முடியும்? ஏதோ உழைத்தால்தானே ஒரு கவளம் சோருவது ஒழுங்காகச் சாப்பிடலாம்..."

*

"பய, நாயைப்போல் விழுந்து பிடுங்குவான், நாலுபேரைக் கண்டால்! அவனுக்கு யார் உதவி செய்வர்?"

*

அக்கிரமம் செய்து அடாபிடி செய்வோன் அவதிப் படுவதும், சோம்பல் கொண்டவன் தேம்பித் திரிவதும், அன்பற்ற உள்ளங் கொண்டோன் ஆதரவற்றவனாவதும், இயற்கைதானே என்பர். நல்லபாம்பு — ஆகவே அடிபட வேண்டியதுதான், உழைக்காத மாடு, தீனி ஏன் அதற்கு, வெறி நாய்—எனவே சர்க்கார் கொட்டடிதான் சரி. ஆனால்...

**நல்லவன்**

**அமைதியை ஆபரணமாகக் கொண்டவன்**

**வந்தாரை வாழவைக்கும் குணங்கொண்டோன்**

**காட்டையும் கழனியாக்கும் கடும் உழைப்பாளி**

அவன் காணவேண்டியது, துன்பம்தான், பூணவேண்டியது பொறுமைதான்! உதவி ஏது மற்றவனாய் உருண்டுகிடந்து சீரழிய வேண்டியதுதான்! — என்று எவரேனும் செப்புவரோ? ஒருக்காலும் கூறார்! மனித இதயம் மரத்துப்போனவன்கூட, மனந்துணிந்து கூறான் — நல்ல பசு, மிகச் சாதுவானது, ஆகவே போட்டு அடி! ஓயாதுழைக்கும் இக்குதிரை, எனவே ஒருபிடி கொள்ளும் போடாதே! விசுவாசமுள்ள நாய், ஆகவே பட்டினி போட்டுக் கொல்லு!—என்று.

ஆனால், அமைதியும் சாந்தமும் ஆபரணமாகக்கொண்டு உழைத்துழைத்து உருக்குலைந்து ஓட்டாண்டியாகப்போகிறானே உத்தமன், நன்றியும் நல்லெண்ணமும் இதயத்திலே தேக்கி கண்களால் அன்பையும், கனிவு தவழும் சொற்களால் நற்பண்பையும் காட்டிடும் நல்லவன், விவசாயி, தொழிலாளி —அவனுடைய கதி எப்படியிருக்கிறது நாட்டில்? அதைப்போலக் கிடக்கிறது, நம்மரும்நாடு! உழைத்தும் வாழ முடியாதவனைப்போல, ஒருவருக்கும் தீங்கு நினையாது, வந்தாரை வாழவைத்தும் வன்னெஞ்சக்காரர்களால் அலட்சியம் செய்யப்படுபவனைப்போல, உதவி செய்யச் செய்யஉபத்திரவத்தைதப்பரிசாகப்பெறும்ஏமாளியைப்போலஇருக்கிறது நம்மருந்தாயகம்! — இப்படி எல்லாம் சொல்வது நாமல்ல, சென்னையைவிட்டு பம்பாய்க்குப் போயிருக்கும் **ஸ்ரீ பிரகாசா செப்பியிருக்கிறார்!** சென்னையை விட்டுக் கிளம்புமுன் 'மெயில்' ஏட்டாருக்குஅளித்த தனிப்பேட்டியில், திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்!! ஏழையின் நிலைக்கு நம்மருந்தாயகத்தையும், ஏழையின் மீதேறிச் சவாரிசெய்யும் பிரபுவின் உருவத்தை வடநாட்டவர் மீதும் ஒப்பிட்டுநாம்பேசினால்சீறிடும்தேசியத் தோழர்களே—கருத்தூன்றிக் கேளுங்கள், இதோ கவர்னர் பிரகாசா, நேருவின் நண்பர், வடநாடாவது தென்னாடாவது என்று வாய் வலிக்க இதுகாறும் பேசிவந்த பெரியவர், சொல்லுகிறார்:

**தென்னாடு, அமைதி தவழும் இடமாம்! வடக்கைப்போலச் சண்டையும் சச்சரவும் அற்ற இடமாம்!**

**பழம் பெருமை வாய்ந்ததாம்—வந்தவர்களையெல்லாம்அன்போடு வரவேற்று, ஆதரவு காட்டும் நற்பண்புகொண்டதாம்—நம்நாடு!**

**அதுமட்டுமல்ல, விளைக்காது விளைச்சலை அறுக்கும் வீணரல்லவாம் நாம்! கடுமையான தொழிற்குணமே கொண்டவர்களாம்.**

பிரகாசா பேசுகிறார்! நமது நாட்டைப்பற்றி,உலகம்போற்றும் உன்னதப் பெருமையை உரைக்கிறார்—உழைக்கும் திறனை வியந்து வியந்து பேசுகிறார் — அன்புள்ளமும், சாந்தமார்க்கமும், கொண்டவர்களாம் நாம் — தமிழர்கள் — பிரகாசா பேசுகிறார்! அவர் அல்ல —அவருடைய அனுபவம் இந்த ஐந்தாண்டுக் காலத்தில் பெற்றாரே — அது பேசியிருக்கிறது, இதுபோல! கற்றது அதிகம்—முழு மனிதனானேன், என்று சொல்லிச் சொல்லி பூஜிக்கிறார். இப்படிப்பட்ட நம்மைத்தான் அன்றோர் நாள், பித்தர்களே என்றார் இவருக்குப் பெரியவராம் நேரு! காட்டுமிராண்டிகளே என்று கடுஞ்சொல் புகன்றார்! கவர்னரோ,காணாதது கண்டேன் இங்கே-பழம் புகழ் பெற்ற நாடு இதனினும் வேறு உண்டோ—என்ன அமைதி இந்தத் தெற்கில் வாழும் மாணவர்களிடம் — தண்மதியும் தளிர்சிரிப்பும் தந்து வரவேற்றுபசரிக்கும் உங்கள் பெருந்தன்மைக்குத்தான் ஈடு இணை ஏது — என்றெல்லாம் வர்ணிக்கிறார்!

வர்ணனை என்ன வாழ்வைத் தந்துவிடுமா? பால்

தரும் பசுதான், கிடைப்பது என்ன? பற்று உணவால் வற்றி வதங்குவதுதானே! மாற்றாரையும் இன் முகம் காட்டி உபசரிக்கும் உத்தமர் தாம் நாம் — பெறுவதென்ன? ஏளனமும் ஏமாற்றமும்தானே! இந்த அளவு வாயாரப் புகழ்ந்தென்ன? வாழ்த்தியென்ன? வாழ்ந்தோர் வீழ்ந்துகிடக்கிறோமே, இதைப்பற்றி ஏதாவது சொன்னாரா, இந்தக் கவர்னர்?

என்று கேட்கத் தோன்றும், தோழர்களுக்கு. கவர்னர், அதையும் கூறுகிறார்,

"......இப்படிப்பட்டவர்களுக்கு எவ்வளவு இன்பகரமான வாழ்வும் நன்மைகளும் ஏற்படவேண்டுமோ, அவ்வளவும் உண்டாகவில்லை"

நல்லவர்கள்—ஆனால் நாயினும் கேடாய் நலிகிறார்கள் — உழைப்பவர்கள், ஆனால் இன்பம் என்பதே இல்லை அவர் தம் வாழ்வில். வந்தாரை வாழவைப்போர், ஆனால் அவர்தம் வாழ்வோ ஒரு துன்பக் களஞ்சியம். "எங்கும் வறுமையையே காண்கிறேன்" என்கிறார்! கேளுங்கள் தோழர்காள், கவர்னரே தெரிவிக்கிறார், வறுமையையே காண்கிறேன் என்று! தெளிவாகவே கூறுகிறார், எங்கும் வறுமையையே காண்கிறேன், என்று.

இதனையே, நாம் ஒவ்வொரு நாளும் நாட்டின் மூலைமுடுக்குகள் எல்லாம் சென்று கூறி வருகிறோம். கேட்டிடும் காமராஜர்கள், நெற்றிக் கண்ணிலேயே எரிப்பதற்கு என்று பேச்சை நெருப்பாக்கி உமிழ்கிறார்கள். இதோ, கவர்னரே தெரிவிக்கிறார்—உழைப்போர்களுள்ள நாடு ஆனால் வறுமை எங்கும்!—அன்பு தவழும் இடம், ஆனால் கொட்டுகிறது வறுமையும் பிணியும் என்று.

"என்ன காரணம் தெரியுமா? நாட்டில் வறுமை எங்கும் அரசோச்சுவதற்கு? நம் நாடு, செல்வம் நிறைந்ததுதான். செந்தாமரைக் குளங்களும், செந்நெலும் கன்னலும் விளையும் பூமிதான், அகிலும் தேக்கும் அழியாக் குன்றமும் உள்ளது என்று வர்ணிப்பர் கவிஞர்கள், இரும்பு கிடைக்கும் சேலம். இதோ, கரும்பு விளையும் தென் ஆற்காடு தெரிகிறது கண்ணில், நெய்வேலி நிலக்கரி கிடக்கிறதாம் மண்ணுக்கடியில், காவேரிக்கரையில் காணக் கிடைக்குமாம் எண்ணெய், முயன்றால்! ஆனால், இருந்தும் இல்லாதவர்களாக நாமிருக்கிறோம், வளமிருந்தும், வாழமுடியாதவர்களாக உள்ளோம். ஏன்? வடக்கு வளருகிறது! தெற்குத்தேய்கிறது!" என்கிறோம், நாம், கவர்னர் பக்தர்! ஆச்சாரியாரின் நண்பர், ஆயினும் நாடெங்கும் வறுமை அரசோச்சக் காரணம் ஆண்டவனிட்ட சாபம் என்று சொல்லிப் புது விளக்கம் தர முற்படவில்லை—அதேபோது, நம்மைப்போல வெளிப்படையாக உரைக்கும் மனத்திண்மையும் இல்லை — எனவே, வார்த்தைகளை மடக்கி அடக்கி, நாடெங்கும் வறுமை தாண்டவமாடுவதற்குக் காரணத்தைச் சொல்லுகிறார்,

**"இயற்கையான வளம் ஏராளம் உள்ளது. பல முன்னேற்றங்கள் ஏற்பட்டும், முழுப் பலனும் கிட்டவில்லை. தொழில் துறையில் அபிவிருத்தி செய்ய இடம் ஏராளமாக இருக்கிறது"**

இடம் ஏராளமாக உள்ளதாம்! என்ன பொருள்? இடம் ஏராளமாக உள்ளதுதான், ஆனால் அங்கெல்லாம் இடம்மட்டும் உள்ளதே தவிர, வளம் தரத்தக்க ஆலைகள் இல்லை! கவர்னர், வெளிப்படையாகக் கூறவில்லையே தவிர, இதற்கு வேறென்ன பொருள்?

"சின்னஞ் சிறுவனாயிருக்கிற போதே கோயம்புத்தூர் கரும்பு என்று கேள்விப் பட்டிருக்கிறேன். அந்தக் கரும்பு, சென்னையிலுள்ள பிற இடங்களிலும் நன்றாக வளரக் கூடும். அந்தக் கரும்பைப்போல வெளி இடங்களில் உற்பத்திசெய்ய ஆரம்பித்துவிட்டார்கள். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக, சென்னை தனது வளத்தைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை"

இவ்விதம் பேசியிருப்பதும் பிரகாசாதான்! வடக்காவது தெற்காவது என்று வக்காலத்து வாங்குவாரே, அதே கவர்னர் பிரகாசாதான் இப்படியும் பேசியிருக்கிறார் —ஆனால், சென்னை வளமடையாததற்குக் காரணம், துரதிர்ஷ்டம் என்று இரத்தினச் சுருக்கமாக முடித்துவிட்டார்! அதற்குப்பதில் அங்கே 'வடவரின் ஆதிக்கம்' எனும் சொல்லை மட்டும் தானே பொருத்த வேண்டும்? கரும்பு, நற்கரும்பு, ஐக்கிய மாகாணத்திலுள்ள பிரகாசாவே சின்னஞ் சிறு வயதில் கேள்விப்படுமளவுக்குப் பிரசித்திபெற்ற கரும்பு விளைகின்ற இடம் தமிழகம்! ஆனால், கரும்பாலைகள் நிறைய உள்ள இடம் எது? தமிழகமா! அல்ல, அல்ல, ஐக்கிய மாகாணம்!!

இந்தக் கொடுமைக்குக் காரணம் என்ன — பிரகாசா பேசமாட்டார் அதை, அவரது பிரிய சீடர்களும் விளக்கமளிக்கமாட்டார்கள், நாம் மட்டுமே துணிந்து கூறுகிறோம், **வடக்கு தெற்கை வஞ்சிக்கிறது என்று!!**

இந்த வஞ்சனையை விளக்க நாம் தந்துவரும் பட்டியல் பெரிது.

ஐந்தாண்டுத் திட்டத்துக்கென டில்லி செலவிடவிருக்கும 6000 கோடியில் சென்னைக்கு கிடைக்க இருப்பது 170 கோடி என்கிற ஒரே ஒரு தகவல் போதும் டில்லியின் சூதுமதியினை உணர்த்த!

நல்லோர் — உழைப்பாளிகள்— புகழ் வாய்ந்த பழமைகொண்டோர் —வளம்கொண்ட நாடுடையோர்— ஆனால், எங்கும் வறுமையையே பெற்று வாழ்வோர், என்று பெருமூச்சுடன் அலறுகிறோம் நாம்! அதற்குக் காரணம், வடவர் ஆதிக்கம் தென்னாட்டை வாட்டி வதைப்பதுதான். அந்த ஆதிக்கம் அகல வேண்டும்; அப்படி அகன்ற பின் ஏற்படும் தனிநாட்டுக்கு நாம் சூட்டும் பெயர்தான் திராவிடநாடு என்று சொல்லி வருகிறோம்!!

இந்தக் குரல், இப்போது, இந்திய உபகண்டத்தில் எட்டாதஇடமில்லை — ஆளும் டில்லியின் அன்புக்குப் பாத்திரமாகியிருக்கும் அனைவருக்கும், நமது உரிமை முழக்கம் இப்போது ஒரு பிரச்னையாக உருவெடுத்து வருகிறது. இல்லையெனில் இந்தக்கிழமை மைசூருக்கு வந்த பீகார் கவர்னர் திவாகர் என்பார், பேசுவாரா, "ஆர்யா, அனார்யா, திராவிட......, என்றெல்லாம்.கன்னியாகுமரிமுதல் காஷ்மீர்வரை விரிந்து பரந்துகிடக்கும் நம்முடையநாட்டில் பேதங்கள் கூடாது," என்று. கன்னியாகுமரி முதல் காஷ்மீரம் வரை ஒரே நாடாம்! சேர்த்துச் சொல்லி இன்புறுகிறார், திவாகர்! ஆனால்மறந்துவிட்டார், இந்தியாவுக்குள் காஷ்மீரம் இருக்கிறதுஎன்று சொல்லிக் கொண்டாலும், காஷ்மீரம் ஒருதனி நாடு—தானொரு தனி நாடென்பதை அண்மையில் தனியாக ஒரு அரசியலமைப்பை நிறைவேற்றி உலகுக்கே உணர்த்தியிருக்கிறது!

(18-ம் பக்கம் பார்க்க)

# தணலில் தங்கம்

**13**

அடுத்த ஞாயிற்றுக் கிழமை காலை கார் எங்களை எல்லாம் சுமந்துகொண்டு வரகூர் நோக்கிப் பறந்தது. அம்மா தன் பேர்த்தியைவிடாமல் எடுத்துக் கொஞ்சிக்கொண்டே வந்தாள். கருங்குழலி அம்மையாரும் வேடிக்கையாகப் பேசிக்கொண்டே வந்தார்.

கணவர் இப்போது எப்படி இருக்கிருரோ என்று எண்ணினேன். ஒருக்கால் என்மீது இன்னமும் வெறுப்பைக் கக்கி வெளியில் விரட்டுவாரோ; விரும்பிஏற்றுப்போற்றுவாரோ என்று அறியாது தடுமாறினேன். ஓரகத்தியின் கணவரை நினைந்து அநுதாபப் பட்டேன். அவர்மட்டும் கொஞ்சம் உறுதியுடன் இருந்திருந்தால் இந்தக் குடும்பம் இப்படியா சீரழிந்து சிதறிப் போகும்? எங்கோ பிறந்து முன்பின் அறிமுக மற்று இருந்த இந்தக் குழலியார் மட்டும் சமயத்தில் உற்ற பெருந்துணையாக வாய்க்கவில்லையானுல் என் கதி என்னவாகி இருக்குமோ, என்று எண்ணி நன்றி உணர்ச்சியுடன் அவரை நோக்கினேன்.

"என்ன தங்கம், பார்க்கிருய்?'' என்ருர் அவர்.

''ஒன்றுமில்லை அம்மா. சும்மா பார்த்தேன்'' என்று மழுப்பினேன்.

''வரகூர்க்குச் செல்லு முன் வழியில் அமரம்பேட்டில் கொஞ்சம் தங்கிச் செல்லலாமே, வழியில்தானே இருக்கிறது?'' என்றேன் நான்.

வரகூர் என்பது என் கணவர் ஊர். அமரம்பேடு நான் பிறந்த மண்.

அன்றிரவு வெண்ணிலவில், நான் பிறந்த மண்ணில் தொழிலாளர் உணர்ச்சிபெற்றுப் பொங்கி எழுந்தனர், போலீஸ் பாரா ஊரில் என்று கேட்டது முதல் ஊரைப் பார்க்க வேண்டும் என்ற பேராவல் என்னுள் எழுந்து வந்தது. என்றும் வேலை செய்யாதவர்கள் இந்தத் தொழிலாளர் வேலைநிறுத்தத்தால் குனிந்து நிமிர்ந்து பணிசெய்யும் காட்சியைக் காணத்துடித்தேன். வருவாய் மிகுதி இல்லை ஆயினும் வளைந்து கொடுக்காத உடல் படைத்தவர்கள் அதிகம் உண்டு எங்கள் ஊரில்.

அதனுல் ஊருக்குப்போய் அதையெல்லாம் பார்க்க வேண்டும் என்ற ஆவல் எனக்கு மிகுதியாக இருந்தது. என் வாழ்வின் முக்கியமான நிகழ்ச்சியை நோக்கி நாங்கள் சென்றுகொண்டிருந்தோம் என்ருலும் இடையில் தங்கவேண்டும் என்று எண்ணினேன். வரகூர் செல்வதில் எனக்கு இயற்கையாக இருக்கவேண்டிய ஆர்வமும் ஆசையும் ஏனே இல்லாமல் போயிற்று. போகவேண்டும் என்று எல்லோரும் செய்த கட்டாயத்திற்காகப் புறப்பட்டேன். எனவேதான் இடையில் அமரம்பேடு பார்க்கலாம் என்று கேட்டேன்.

''ஆமாம். நானும்சொல்லலாம் என எண்ணி இருந்தேன். இங்கே இறங்கிப்போனுல் நல்லது. அறுவடையைப்பற்றியும் பார்த்தாற்போலிருக்கும்'' என்ருர் அப்பா.

''சரி ஆகட்டும்'' என்ருர் குழலியார்.

கார் அமரம்பேட்டு எல்லையை நெருங்க நெருங்க இது அமரம்பேடுதானு எனத் திகைத்தேன். இந்த ஊருக்கு இவ்வளவு பெருமையா என மருண்டேன்.

ஊரை நெருங்குவதற்கு முன்னமேயே சத்திரத்து மைதானத்தில் வரிசை வரிசையாக ஏழெட்டுக் கூடாரங்கள் அடித்திருக்கக் கண்டேன். நீல நிறமுள்ள போலீஸ் லாரிகள் ஏழோ எட்டோ நின்றிருந்தன. நீட்டிய துப்பாக்கியில் செருகிய கத்தி

**மா. கி. தசரதன்**

யுடன் இரும்புத் தொப்பி அணிந்த போலீசார் சாலையில் நெருங்கி நின்றிருந்தனர். பளபளப்பான புத்தம் புதிய இரண்டு மூன்று பெரிய கார்கள் நின்றிருந்தன. சாலையின் மரங்கள் இரண்டை இணைத்தவாறு தலைக்கு மேலே ஒரு கம்பி கட்டப்பெற்று இருந்தது. அது என்னவென்றே எனக்கு விளங்கவில்லை. குழலியார்க்குத் தெரிந்திருக்கலாம் என எண்ணி "அது என்னம்மா'' என்று கேட்டேன்.

வானெலிக்கு அப்படிக் கம்பி அமைப்பார்கள். ஆனுல் சாலையில் இருப்பதினுல் இது வானெலியின் கம்பி அல்ல. ஒரு வேளை இரகசியச் செய்தி இலாகாவின் செய்தித்தொடர்பாக இருக்கலாம்'' என்ருர்.

'அமரம்பேட்டிலா இவ்வளவு தடபுடல்?' என வியந்தேன்.

எங்கள் கார் அந்த சத்திரத்தைக் கடந்தபோது போலீஸ் முகாம் இருந்த பக்கம் நோக்கினேன். எனக்குப் பேராச்சரியமாக இருந்தது 'வசவச' என்று ஒரே ரிசர்வ் போலீசார் மயமாக இருந்தது. சென்னைக்குப் போனபின் இப்படி இரண்டொரு முறை பார்த்திருக்கிறேன். யாராவது பெருந்தலைவர்கள் வருகின்ற போது இப்படிப்பட்ட காட்சியைக் காணுவது உண்டு. ஆனுல் இந்தச் சிற்றூரிலுமா இந்தக் காட்சி என எண்ணினேன்.

எங்கள் வீட்டில் சென்று கொஞ்சம் களைப்பாறினேம். இதற்குள் இரண்டொருவர் வந்து நலம் கேட்டுச் சென்றனர். அப்பா திண்ணைமேல் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார். நானும் அம்மாவும் கருங்குழலிஅம்மையாருடன்தெருநடையில் அமர்ந்திருந்தோம்.

தெருவில் யாரோ ஒருவர் மிகவேகமாகக் கையில் ஒருசெம்புடன்சென்றுகொண்டிருந்தார்.

"மணியக்காரரே மிகவும் அவசரமோ?'' என்ருர் அப்பா.

"அட! நீங்களா? எப்போதுவந்தீர்கள், நான் பார்க்கவே இல்லை. எல்லாம் இந்தத் தொந்தரவுதான் உங்களுக்கென்ன பட்டினத்தில் கடற்காற்று வாங்கிக்கொண்டு'' என்று சொல்லிக்கொண்டே நெருங்கி வந்தார்.

"உட்காருங்கள் மணியக்காரரே' என்ருர் அப்பா.

"நேரமில்லை, நின்றுகொண்டே பேசுகிறேன். தீடீர் தீடீர் என்று இப்போதெல்லாம் அதிகாரிகள்வந்துவிடுகின்றனர். முன்பெல்லாம் தாசில்தாரையே கிராமங்களில் காண இயலாதாம், எங்கள் அப்பா சொல்லுவார். ஏன் உங்கட்குத் தெரியாதா? இப்போது கலெக்டரே இருமுறை வந்து இரண்டுநாட்கள் இங்கே தங்கி இருந்தார்'' என்ருர் அவர்.

"ஏதாவது சமரசம் ஆயிற்ரு? எப்போது அறுவடை?'' என்ருர் அப்பா.

"அறுவடையாவது அறுவடை! தொல்லைஇல்லாமல் தீர்ந்தால்போதுமென்று இருக்கின்றது. தினம் நான்கைந்து பேர் கைதாவதும் சிறை

செல்வதுமாகவே இருக்கிறது. எல்லோர்க்கும் தொல்லை''

ஏன், ஊராரே ஒத்துப் போவது தானே?''

''அதுதானே தெரியவில்லை. எப்படி ஒத்துப்போவது என்றே விளங்கவில்லை. வலியக்கொண்டு வந்து சட்டத்தை ஏற்படுத்திக் கொண்டோம். மீள வழி தெரியவில்லை. உரலில் தலையைக் கொடுத்தது போல் ஆயிற்று''

''என்ன சட்டம்?''

''வேறு என்ன? 144 தடைதான்''

''இந்த ஊரிலா''

''ஆமாம்.''

இதற்குள் ஒரு ஆள் ஓடிவந்து ''ஐயா போலீஸ்பெரியதுரை வந்திருக்கிருர். வாங்க'' என்று மணியக்காரரிடம் சொன்னுன்.

''பார்த்தீர்களா? இதே தொல்லைதான். நிற்க நேரமில்லை, வருகிறேன்'' என்று அவர் விரைந்தார்.

''என்ன கொடுமை இது. இந்த ஊரில் 144 சட்டமாமே'' என்றுவருந்தினேன். அதைக் குழலியாரிடமும் சொன்னேன்.

''என்னம்மா செய்வது? இதற்குத்தான் முதலில் பொருளாதாரப் போராட்டத்தைவிடச்சமுதாயப்புரட்சி தேவை என்று சொல்லுகிறேன்.'' என்ருர் அவர்.

''சமூகத்தில் சமநிலை வாய்த்து விட்டால் பொருளிலும் சமத்துவம் வந்துவிடுமா அம்மா?'' என்று கேட்டேன் நான்.

''வராது தான். அப்போது இவ்வளவுகொடுமை இராது. இன்று உங்கள் ஊரில் பெரும்பணக்காரர் யாரும் இல்லை. தொழிலாளர்க்கும் நிலமுடையவர்களுக்கும் பெருத்த வேறுபாடு இல்லை. ஆயினும் இவர்கள் சாதியால் உயர்ந்தவர்கள் என்ற எண்ணம் இருப்பதினுல் தாழ்ந்த சாதியார் என்று அவர்கள் நினைக்கின்றவர்கள் என்றைக்கும் அடங்கிக் கிடக்கவேண்டும் என்றுஎண்ணுகின்றனர் அவர்கள் அடங்கிக்கிடக்க மறுத்துக் கொஞ்சம் உரிமையைவிரும்பினுலும் இவர்கள் முகம் சிணுங்குகின்றது. பிடிவாதம் வலுக்கின்றது. தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி அவர்களை அச்சுறுத்தி அடக்கிவிட எண்ணுகின்றனர்''

''ஆயின் இடையிலே வந்துள்ள போலீஸார் தொல்லை?''

''போலீஸார் அவர்களாக எங்கும் வருவதில்லை அவர்கள் சட்டத்தின் காவலர்களே. ஆயினும் அழையா வீட்டில் நுழையார்கள், எல்லாரும் நல்லவர்களானுல்'' என்ருர்.

''என்ன இருந்தாலும் பொருளால் எல்லோரும் சமமாகிவிட்டால் பிறகு எந்த வேறுபாடும் இருக்காதல்லவா?'' என்றேன்.

''என்ன தங்கம் இன்னும் உனக்கு நான் சொல்லுவது விளங்கவில்லை? பொருளில் சமநிலையை நான் வேண்டாம் என்று சொல்லவில்லையே. கட்டாயம்வேண்டும். ஆனுல் முதலில் சமுதாயத்தில் சமத்துவம் வரவேண்டும். அப்போதுதான் மக்களுக்குப் பொதுநோக்கம் பிறக்கும். மனதில் பொதுநோக்கம் பிறந்தால்தான் எதைப்பற்றியும் பொதுமை எண்ணம் பூக்கும். இல்லையானுல் 'நான் பெரியவன் அவன் சிறியவன்' என்ற எண்ணம் மனதில் இருந்துகொண்டு வேதனையை உண்டாக்கும். அதனுல் தான் முதலில் சமுதாயம் சமமாகட்டும்; பிறகு பொருட்பொதுமை ஏற்படட்டும் என்கிறேன்'' என்றேன்.

அவர் சொன்ன கருத்துக்கள் எனக்கு நன்ருக விளங்கின. நம் நாட்டில் இந்த நிலை இருப்பதனை என்னுடைய சின்ன அநுபவமே நன்ருக உணர்த்திற்று. ஆயினும் அவர் மேலும் பேசுவதைக் கேட்கவேண்டும் என்ற ஆவலால் ஐயம் தெளியாதைப்போல் முகக் குறிப்பு காட்டினேன்.

''இன்னும் என்ன தங்கம் உனக்கு ஐயம்? நான் கேட்கின்றேன்; நமது நாட்டில் சாதிச் செருக்கு எவ்வளவு கொடுமையாக இருக்கின்றது என்பதைத் தெரிந்திருக்கின்ருய் அல்லவா?'' என்ருர்.

''ஆமாம் அம்மா, தெரியும்'' என்றேன்.

''நீ, கிராமத்தில் வளர்ந்தவள், உனக்கு நன்ருகத்தெரியும். தொழிலாளர்களை, சேரியில் இருப்பவர்களை அங்கு எவ்வளவு கேவலமாக நினைத்து ஒதுக்குகின்றனர்?''

''உண்மைதான் அம்மா''

''சரி, ஒருகிராமத்தில் எல்லார்க்கும் சம அளவு செல்வம் இருக்கிறது என்று எண்ணிக்கொள். எல்லோருமே பாடுபடுகின்ருர்கள் என்றும் எண்ணிக்கொள். ஆனுல் அவர்களுக்குள் பிறப்பால் வேறுபாடு சொல்லிக்கொண்டு ஒருவர்க்கொருவர் ஒட்டி உறவாடாமல் விலகிப் பிரிந்து வாழ்ந்தால் அந்த நிலை என்ன, மகிழ்ச்சியாகவா இருக்கும்? பொருளால் அப்போது என்ன பயன்? எனவேதான் தங்கம், நான் அப்படி நினைக்கிறேன்'' என்ருர். இனியும் விளங்கவில்லை என்று சொல்லுவது தப்பு என்று ''ஆமாம். நீங்கள் சொல்வது உண்மைதான் அம்மா' என்றேன். சென்னையில் பார்த்திருக்கின்றேனே, செல்வச் சிறப்பு எப்படி இருந்தாலும் உள்ளம் ஒன்றிவிட்டால் வேறுபாடு இல்லாமல் ஒட்டிப் பழகுகின்றனரே. மகிழ்ச்சி தரும் அந்த நல்ல நிலைமைக்காகத்தானே எந்த முயற்சியும்? என்று எண்ணியவாறே மோட்டு வளையைப்பார்த்துக் கொண்டிருந்தேன்.

''பகல் 1-மணிக்குப் புறப்பட்டால் சரியாக இருக்கும்'' என்று அம்மா சொல்லிக்கொண்டிருக்கும்போது, முன்னே அவசரமாகச் சென்ற மணியக்காரர் ஓடிவந்தார். ஓடிவந்த வேகத்தில் அவருக்கு மூச்சு மேலும் கீழும் விரைவாக வந்து போய்க் கொண்டிருந்தது.

அப்பாவைக் கண்டதும் ''நான் சொன்னேனே பார்த்தீர்களா. இந்தப் போலீஸார்லாரி இந்த ஊரில் இருந்து ஏழை மக்களை அச்சுறுத்துவதுபோதாது என்று இப்போதுவேறு தொல்லையும் சேர்ந்திருக்கிறது'' என்ருர்.

''என்ன?'' என்ருர் அப்பா.

''என்னத்தைச் சொல்வது! நேற்றுக் கைது செய்தவர்களைக் கொண்டு போய் போலீஸ் நிலையத்தில் விட்டுவிட்டுத் திரும்பும் பயணத்தில் ஒரு ஆள்மீது ஏறிவிட்டதாம் அந்த வண்டி. அந்த ஆளே சாலை ஓரத்தில் நின்றிருந்து வண்டி அருகில் நெருங்கியதும் கீழே வீழ்ந்து படுத்துவிட்டானும்''

''ஓட்டுபவர் லாரியை நிறுத்தவில்லையா?'' என்ருர் அப்பா.

''அவர்மிகவும்நல்லவர்தான். எனக்கும்தெரியும். என்னமுயற்சித்தும்ஆள் மீது ஏறிவிட்டதாம். கால்கள்மீது தான் வண்டிச் சக்கரங்கள் சென்றிருக்கின்றன. பிழைக்கலாம் என்று நினைக்கின்றேன்''

அடிபட்டதும் பார்த்ததில் உயிர் இருந்ததாம். உடனே மருத்துவ நிலையம் செல்லலாம் என்று வந்தவர்கள் இங்கே தலைவரிடம் சொல்லிவிட்டுப் போக வந்தார்கள், என்ருர்.

## நமது ஆறுதல்

நமது இயக்கத் தோழரும், கடலூர் வழக்கறிஞருமான தோழர் இரா. இளம்வழுதி அவர்களின் துணைவியார் தோழியர் விசாலாட்சி அவர்கள் 29—11—56 அன்று, உயிர் நீத்தார் என்ற செய்தி அறிந்து திடுக்கிட்டோம். துணைவியை இழந்து தவிக்கும் தோழருக்கும், தாயைப் பிரிந்து கதறும் குழைந்தைகட்கும் நமது ஆறுதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

எங்கள் நெஞ்சம் துணுக்கென்றது.

"ஐயோ பாவம்" என்றார் அப்பா.

"பாவம் இருக்கட்டும். கொஞ்சம் சத்திரம் வரை வாருங்கள். அடிபட்டவன் வரகூர் அண்மையில் வீழ்ந்தானும். உங்களுக்கு அந்த ஊர்தான் பழக்கமாயிற்றே. ஆள் தெரியுமா கொஞ்சம் வந்து பாருங்கள்"என்றார்.

"என்ன! வரகூர் ஆளா?" என்று நான் உள்ளிருந்தபடியே கூவினேன்.

"ஏன் எல்லோருமே போகலாமே" என்று குழலியார் சொன்னார்கள்.

சத்திரத்தை நெருங்க நெருங்க என் இதயம் வேகமாக வேலைசெய்தது. ஏனோ அச்சம் என்னை ஆட்கொண்டது.

கூட்டத்தை விலக்கிக்கொண்டு உள்ளே சென்று அடிபட்டிருந்தவரைக் கண்டதும் நான் 'ஓ'வென்று அலறினேன்; மயங்கியும் வீழ்ந்துவிட்டேன்போலும்.எழுந்துபார்த்தபோது அம்மாதன் மடியில் என்னைக்கிடத்திக் கொண்டு கண்களில் நீர்வழிய தேம்பிக்கொண்டிருந்தாள். அப்பாஇடிந்து போய் கவலையே உருவாக அங்கே காட்சியளித்தார்.

அங்கு அடிபட்டுக் கிடந்தவர்வேறு யாருமல்ல. என் வாழ்வின் மணிவிளக்காகத் துலங்கிப் பெருமை செய்திருக்கவேண்டிய என் கணவர்தான்.

தோல்வி மனப்பான்மை கொண்டவள்போல் கணவருடன் மீண்டும் சேர்ந்துவாழும் வாழ்க்கையைப் பெறுவதில் முயற்சியற்றுக் கிடந்தேன் என்றாலும் இரங்கத் தக்க நிலையில் இருந்த அவரைக் கண்டதும் என் இதயம் கரைந்துவிட்டதைப்போல் உணர்ந்தேன். சொல்ல இயலாத ஏக்கம் என்னை வந்து கப்பிக்கொண்டதைப்போல எண்ணினேன். அழவும் ஆற்றல் அற்று வெற்றிடத்தைச் சற்று நேரம் வெறிச்சென்று நோக்குவதும் உதடுகளைக் கடித்துக்கொண்டு தேம்புவதுமாகவே இருந்தேன்.

"அழாதே தங்கம் அழாதே" என்று யார்யாரோ மாற்றி மாற்றிச் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.அவர்களுடைய சொற்களில் நான் எப்படி ஆறுதல் கண்டுவிட முடியும்? அழாமல் ஆறுகின்ற துன்பமா நான் பெற்றது? பூத்துக் குலுங்கும் பொலிவோடு இருந்தபோது புலம்பும் வேலையே எனக்குப் பெரிதாக இருந்தது. வாடி நின்றுவிட்ட பிறகுமா வாட்டம் தொலையாமல் நிலைகுலைந்து தடுமாற வேண்டும் என்று எண்ணி வருந்தினேன். மெல்ல மெல்ல ஒரு நிலைக்கு வந்த பிறகுதான் கணவருடைய முகத்தை உற்றுப் பார்க்க இயன்றது. அவரோ ஏதும் அறியாது மயங்கிக்கிடந்தார். 'அழாதே' என்று வாய்திறந்து சொல்லாவிட்டாலும் கையை மட்டுமாவது மெல்லத் தூக்கி அசைத்திருந்தாலும் நான் அந்தக் கரத்தின் அசைவிலேயே அமைதியைப் பெற்றிருப்பேன். ஆனாலும் அவருடைய அசைவிலா நிலை என்னை அல்லற் கடலில் தள்ளியது. 'ஐயோ' என்று தேம்பியவாறு முகத்தைக் கைகளால் அறைந்துகொண்டேன்.

"பொறுதங்கம்அழாதே,இதோபார் மருத்துவர் வந்திருக்கிறார், மருந்திடட்டும் இரு" என்று சொன்னார் அப்பா.

"அடி பலமானதுதான். எலும்பு இனிஒட்டாது. உடனேசென்னைக்குக் கொண்டு செல்லுங்கள்" என்றாராம் அந்த மருத்துவர்.

குழலியார் எல்லா ஏற்பாடுகளையும் செய்து எல்லோரையும் சென்னைக்கு அழைத்து வந்தார்.

சென்னைக்கு வந்தபிறகும் இரண்டு மூன்று நான் நிலையற்றுத் திரிந்தேனும்;என்ன செய்வது என்று தெரியாமல் திகைக்கும் மயக்க நிலையில் இருந்தேனும். எல்லாம் பிறகுதான் எனக்கே தெரியும்.

மனம் உறுதியானது என்று அதைப்போய் பெரிய துணை என்று நான் நம்பிவிட்டேன். என்ன சொல்வது? நொடியில் சிதறிப்போகும் கண்ணாடிபோலத்தான் ஆகிவிட்டது அது.

ஆனால் "துன்பத்தில் கலங்காதே அம்மா" என்று அந்தப் பேராசிரியர் சொல்லிவிட்டுப்போன சொற்கள் தான் எனக்குத் துணையாக நின்றன. அவர் முகத்தில் நிலவிய அமைதியையும் அவர் சொன்ன சொற்களின் பொருள்ஆழத்தையும் எண்ணி எண்ணி மெல்ல மெல்ல அமைதியைப் பெற்றேன். அவருடைய அறிவுரை மட்டும் கிடைக்கப்பெறவில்லை என்றால் அடுக்காக வந்த துன்ப அலைகளின் கொடுங்கரங்களில் சிக்கி வாழ்வுக் கடலில் நான் மூழ்கிப் போயிருப்பேன். கடலில் கரை காணாது தவித்த எனக்கு பெரும் புணையாக அவர் உரைகள் தான் பயன்தந்தன.

கணவருடைய கால்களில் ஒன்று பயன் அற்றுப்போகும் என்ற செய்தியையும், பிறகு சிலநாட்கள் கழித்து அந்தக்கால் புண்ணால் புரை ஓடுகின்றது, அதனால் காலையே எடுத்துவிட வேண்டும் என்று சொன்னபோதும் அவர்மொழிகள்தான் எனக்குத்துணை நின்றன. தடுமாறி விழாமல் நான் பற்றி நிற்க அவையே ஊன்று கோல்கள் ஆயின.

மெல்லமெல்லக்கணவர்நலம்பெறத் தொடங்கினார்.

மருத்துவ மனையிலிருந்துகண்ணகி இல்லத்திற்குவந்தபிறகு அவர் நடக்க இயலாமல் கட்டைகளின் துணையால் நடந்ததைக் காணத் துன்பமாகத் தான் இருந்தது. எனினும் எல்லாவற்றையும் மறந்துவிட்டு மீண்டும் முன்போல் கலகலப்பாகபேசிப்பழகும் நிலையும்வரத்தொடங்கியது. குழந்தை மணிமேகலையை எடுத்துக் கொஞ்சுவதில் சளைக்காத இன்பம் கண்டார்.

கணவருடன்தனித்திருக்கும்வேளையில் சில நேரங்களில் ஒரகத்தியின் செய்தியைக் கேட்க மனம் விழையும், கேட்கலாமா என்று எண்ணுவேன். கேட்டால் என்ன சொல்லுவாரோ என்று எண்ணி அடங்கி விடுவேன். சில நேரங்கள் ஏதோ சொல்ல முயன்று பிறகு அந்த முயற்சியை விட்டுவிடுகின்றார் என்பதும், சில வேளைகளில் அவர் முகத்திலிருந்து உணருவேன். அந்தநேரங்களில் நெடுநேரம் இருவரும் ஏதும் பேசாது வெறுமையாகக் கிடப்போம்.

ஒருநாள் அப்படி இருக்கும் போது கேட்டேவிடுவோம் என்றதுணிவோடு "ஊரில்..." என்றேன். அதற்குமேல் நா எழவில்லை.

"என்ன?" என்பது போல் பார்த்தார்.

"சொல்லு" என்றார்.

"அக்கா......"

என்றுதான் சொன்னேன். அதற்குள் அவர் முகம் அடைந்த மாறுதல் என்னால்அளவிட்டுச்சொல்லமுடியாத அளவு ஆயிற்று. ஏன் கேட்டோம்' என்று நொந்து கொண்டேன்.

"தங்கம்" என்றார்.

அவர் உதடுகள் துடித்தனவே தவிர சொற்கள் வெளிவரவில்லை. என்ன சொல்லுவாரோ என்று எதிர் பார்த்தபடியே அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

(தொடரும்)

## வருந்துகிறோம்

சுயமரியாதைக் கொள்கையில் பற்றுக்கொண்ட காஞ்சீபுரம் ஆசிரியர் ஜெகந்நாதன் அவர்கள் 12—12—56ல் இயற்கை எய்தினார் என்ற செய்தி அறிந்து வருந்துகிறோம். துயரால் வாடும், அவரது துணைவியாருக்கும், மக்களுக்கும், மருகர் கிருஷ்ணமூர்த்திக்கும் நமது ஆறுதல் உரித்தாகுக.



காஞ்சீபுரம்

16—12—'56

தம்பி !

நேரு பண்டிதர் வருகிறாராம்! தமிழ்நாட்டில் தேர்தல் பிரசாரத்தைத் துவக்கி வைக்கப்போகிறாராம்!! வேறு சில ஊர்களுக்கும் சென்று பிரசாரம் செய்வாராம். பெருமையுடனும் பூரிப்புடனும் காமராஜர் இதனை அறிவித்திருக்கிறார்.

"கமிட்டிகளிலே கவலையுடன் பேசினீர்களே! எவ்வளவு பணம் கரைந்து போகுமோ, எவனெவனுடைய கையைக் காலைப் பிடித்துக்கொண்டு கெஞ்சவேண்டி வருமோ, எப்படி எப்படி எல்லாம் நாட்டிலே பிரசாரம் செய்வார்களோ மாற்றுக்கட்சிக் காரர்கள் என்றெல்லாம் ஏங்கித் தவித்துக் கிடந்தீர்களே! இதோ கேளுங்கள் பெருமைக்குரிய செய்தியை; நம்பிக்கை தரும் செய்தியை; நான் நிலைமையை எடுத்துக்கூறி, நமது நேரு பண்டிதரை இங்கு வந்திருந்து தேர்தல் பிரசாரத்தைத் துவக்கித்தரச் சொல்லிக்கேட்டுக்கொண்டேன், அவரும் அன்புடன் இசைந்துவிட்டார், இனி என்ன பயம் உங்களுக்கு? துவக்குங்கள் வேலையை, துரிதமாகக் கிளம்புங்கள்!" என்று, காங்கிரஸ் சார்பில் தேர்தலில் ஈடுபடும் கனதனவான்களுக்குக் காமராஜர் கூறிவிட்டார்!!

எனக்கு, தம்பி! இதிலே வருத்தந்தான்—அதற்குக் காரணம் இரண்டு.

சென்ற திங்களில்தான், இந்தப் பரந்த உபகண்டத்திலேயே, மிகப் பயங்கரமானதும், மிகமிகக் கோரமானதுமானதோர் இரயில் விபத்து நேரிட்டது—சர்க்கார் கணக்களித்துள்ளனர் 152 பிணங்களைக் கண்டெடுத்தோம் என்று—மற்றப்படி கூழாகிப்போன உடலங்கள் ஏராளம்! குவியலாகக் கொட்டிக் கொளுத்தியே விட்டார்களாமே!! தொலைவிலே நின்றுகொண்டு, தீ மூண்டு எழுந்தது கண்டு ஐயோ! என் மகன்! அப்பா! என் தாய்! ஐயயோ! என் கணவன்! ஐயகோ! என தருமை மனைவி! என் அண்ணன்! என் தம்பி! என்றெல்லாம் கதறினராம், சென்றவர்கள் பிணமாகக் கூடத் தம்மிடம் ஒப்படைக்கப்படாத நிலைபெற்ற துர்ப்பாக்கியவான்கள்!! ஆற்றிலே மூழ்கி, இறந்து, உடலை, மீனினங்கள் கொத்திக் கொத்திக் கெடுத்துவிட்ட நிலையிலும், அழுகிப்போன நிலையிலும், பல சடலங்களை ஆங்காங்கே கண்டெடுத்தனர்! இது போன்றதோர் கோரமான விபத்து நேரிட்டதில்லை என்று உயர்நிலையில் உள்ளவர்களே ஒப்புக்கொள்கின்றனர். விபத்து நடந்த இடத்தருகே செல்லவே முடியவில்லை, அவ்வளவு கோர நிலைமை என்கின்றனர் 'கலம்'கள்.

அப்போது, அரியலூர் வருவார்! ஆறுதல் அளிப்பார்! விபத்துக்குக் காரணமானவர்களைக் கண்டிப்பார்! விழியைத் துடைத்துக்கொள்ளுங்கள், மனம் உடையும் துக்கம் நேரிடும்போதுதான், மகத்தான மனதிடம் காட்டவேண்டும்! என் அனுதாபம் உங்கட்குத் துணை நிற்கும்!! — என்றெல்லாம் நேரு பண்டிதர் பேசுவார்; கேட்டு

# எரிகிற தழலில்....!

மக்கள் தமக்கு வந்துற்ற அவதியையும் ஓரளவுக்கு மறந்து, நமது முடிசூடா மன்னர், நமது குடும்பப் பெரியவர் போன்றவர், எத்துணை மனம் உருகிப்போயிருக்கிறார், நாம் அடைந்துள்ள அவதி கண்டு அவர் ஆறாத்துயரம் அடைந்துள்ளார், அவர் கூறுவதுபோல, நமக்கு இப்படிப்பட்ட சமயத்திலேதான் மனதிடம் வேண்டும், ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ! என்று ஆன்றோர் கூறினரன்றோ!! என்ன செய்வது, தாங்கிக்கொள்ளத்தான் வேண்டும் என்று கூறியும் எண்ணியும் மனதுக்கு ஓர் சாந்திதேடிக்கொண்டிருந்திருக்கக் கூடும்.—இப்படியெல்லாம் நடக்கும் என்று எதிர்பார்த்தனர்.

நேரு பண்டிதரே நேரடியாக விபத்து நடைபெற்ற இடத்துக்கு வருகிறார் என்ற உடன், அந்த வட்டாரத்து அதிகாரிகள் குழாமே அலறிப்புடைத்துக்கொண்டு நிவாரண வேலையை மும்முரமாக்கி இருக்கும். நீயும் நானும் சென்றிருந்தால், என்ன நடைபெறும்! கதறுவோருடன் கூடி நாமும் அழுதிருப்போம்! ஐயயோ எனும் ஓலம் கேட்டு நாமும் துடித்திருப்போம். நேரு பண்டிதர் வந்திருந்தால் நிலைமையில் நிச்சயமாக ஓர் மாற்றம் தெரியும், ஆட்சித்தலைவருக்கு நம் மக்களிடம் எத்துணை அன்பு இருக்கிறது என்று தெரிந்திருக்கும், ஆனால், **நேரு பண்டிதர் அரியலூர் வரவில்லை! பிணமலையும் இரத்த வெள்ளமும் கண்டு தமிழகம் துடிதுடித்து அழுதபோது ஆறுதல் அளித்திட நேரு பண்டிதர் இங்கு வரவில்லை.** தாலி இழந்த தாய்மார்கள், மகனை இழந்த மாதாக்கள், கதறினர், அம்மையே!—அழாதே! வந்துற்ற விபத்து வேதனை தருவதுதான், எனினும், என் செய்வது, தாங்கிக்கொள்ளத் தானேவேண்டும்! என்று தைரியம் பேசிட, ஆறுதல் அளித்திட நேரு பண்டிதர் வரவில்லை.

## அரியலூர் விபத்தின் போது வராத நேரு பண்டிதர், ஓட்டு கேட்க மட்டும் ஓடோடி வருகிறாராம்!

வெட்கப்படுகிறோம், வேதனைப் படுகிறோம்!—என்று பொறுப்பை மறவாத, மனிதாபிமானத்தை இழந்திடாத காங்கிரஸ் நண்பர்கள் கூறிக் குமுறுவது தெரிகிறது, தம்பி, ஆனால் நேருபண்டிதருடைய உள்ளப் பாங்கு எப்படி இருக்கிறது என்று எண்ணிப் பார்த்தாயா? எத்துணை அலட்சியம் இருந்தால், எந்த அளவுக்கு பந்தபாசம் இல்லாதிருந்தால், இங்கு 152 பிணம் கண்டெடுத்தோம் என்று சர்க்காரே கணக்குக் கொடுத்தனர், மற்ற உருவங்கள் உடலங்களாகக்கூட இல்லை, தலைவேறு உடல்வேறு, கால்வேறு கரம்வேறு என்று ஆகிவிட்டன, ஆகவே அடையாளம் கண்டறியவும் முடியவில்லை, இத்தனை பேர் என்று கணக்கு எடுக்கவும் இயலவில்லை என்றுகூறி, குழிவெட்டி அதிலே போட்டு மொத்தமாகக் கொளுத்திவிட்டோம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்; காணச் சகிக்காத காட்சியாக இருக்கிறதே, கண்றாவிக் கோலமாக இருக்கிறது என்று பத்திரிகைகள் எடுத்துக்காட்டின; இவ்வளவுக்குப் பிறகும், நேரு பண்டிதருடைய உடல் ஆடவில்லை, அசையவில்லை, ஓடோடிச் சென்று, அந்த மக்கள் மத்தியில் நின்று, மாரடித்து அழும் அந்த மக்களுக்கு ஆறுதல் அளிப்போம் என்று இரக்கம் எழவில்லை! இப்போது வருகிறாராம், எல்லோரும் காங்கிரசுக்கே ஓட்டு அளியுங்கள்! என்று உத்தரவு பிறப்பிக்க! ஒரு வேளை, மக்களைப் பார்த்து அந்த மகானுபாவர் கோபித்துக்கொண்டால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை; "மக்களே! என்ன உங்கள் புத்திவரவர இப்படிக்கெட்டுப் போகிறது! எதற்காக இரயிலைக் கவிழவிட்டீர்கள்! அதனாலே இரயில்வே இலாகாவுக்கு எவ்வளவு பெரிய நஷ்டம். அதுதான் போகட்டும் என்றால், எவ்வளவு பேர் செத்துவிட்டார்கள்— அதனால் எங்கள் கட்சிக்கு எத்தனை 'ஓட்டு' நஷ்டம் தெரியுமா? இனி இப்படி எல்லாம், சர்காதீர்கள்—எப்படியும் ஐந்தாண்டுக்கு ஒரு தடவை எங்கள் கட்சிக்கு ஓட்டு தரவேண்டுமே அதை மறந்துவிட்டு, மடிந்து போகிறீர்கள் — இது மன்னிக்க முடியாத குற்றம்! எனினும் பொறுத்தேன்—இனி இந்தத் தேர்தலில் அனைவரும் கூடி, ஐந்தாண்டுத்திட்ட பஜனைபாடி, ஓட்டுச் சாவடிக்கு ஓடி, மாட்டுப் பெட்டியை நிரப்புங்கள் — என்று கூடப் பேசுவார்.

தமிழ் நாட்டிலே, இந்த அரியலூர் விபத்தின்போது மட்டுமல்ல தம்பி, முன்பு இருமுறை புயலால் பேரிழப்பு நேரிட்டபோதும், நேரு பண்டிதர் வரவில்லை. உனக்கு நினைவிலிருக்கும், புயல் நிவாரண நிதிக்காகப் பணியாற்றியிருக்கிறாயே! காங்கிரஸ் நண்பர்களுக்கு நினைவில் இருக்காது; நினைவிற்குக்கொண்டுவருவது என்றாலும் அவர்களுக்குச் சங்கடமாக இருக்கும்.

ஆனால் நாடு எப்படி மறக்க முடியும்; தமிழகத்தில் புயலாலும் வெள்ளத்தாலும் இரயில் விபத்தாலும் பயங்கரமான அழிவு நேரிட்டு, அழுகுரல் பீறிட்டுக் கிளம்பிய நேரத்திலெல்லாம், நேரு பண்டிதர் வரவில்லை.

தமிழகத்திலே தேர்தல் பிரசாரத்துக்கு இப்போது வருகிறார்; முன்பும் வந்திருந்தார்!

தேர் திருவிழாப்போல நடத்தப்படும் கோலாகலங்களிலே கலந்து கொள்ள, அடிக்கடி வருகிறார்—ஆனந்தத்தோடு வருகிறார்!

சங்கீத வித்வத் சபையின் துவக்க விழாவா? வருகிறார்!

கண்காட்சி துவக்க வேண்டுமா? வருகிறார்!

திருவிதாங்கூர்சமஸ்தானத்துக் காட்டிலே, கண்ணாடி மாளிகையிலே தங்கி இருந்து, கரிகளின் காதல் விளையாட்டினையும், புலியாரின் களியாட்டத்தையும் கண்டு களிக்கலாம் என்று அழைப்பு விடுத்தனர்; சென்றார், கண்டார்!

தமிழ் இசையை நான் அறியேன்! இசையேகூடப் பொதுவாக எனக்குப் புரியாது! எனினும சுப்புலட்சுமியின் கானம் கேட்கும் போது, விவரிக்க முடியாததோர் ஆனந்தம் எழத்தான் செய்கிறது. சுப்புலட்சுமியார் சங்கீத ராணி!—என்று நெஞ்சு நெக்குருகப் பேசினார்!

**எல்லா விழாக்களுக்கும் அழைப்பு அனுப்பினால், தமிழகம் வருகிறார்—விபத்து, அழிவு, நேரிடுகிறது என்றால், வருவது இல்லை.** வரவேண்டும்—ஆறுதல் அளிக்க வேண்டும் என்ற பாசம் எழுவதில்லை; டில்லியிலேயே நமது வல்லத்தரசுதான் குழந்தைபோலத் தேம்பித் தேம்பி அழுதார் என்று பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன; நேரு பண்டிதருக்கு ஏற்பட்ட வருத்தமெல்லாம் தமது ஆருயிர்த்தோழர் லால்பகதூர் சாஸ்திரி, இந்தக் காரணத்துக்காக மந்திரிப் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டாரே என்பதுதான்.

நேரு பண்டிதரின் இதயம் ரொம்ப மென்மையானது — அவரால் அவதியை, அழுகுரலைச் சந்திக்க முடியாது—விபத்து, வேதனை என்றால் அவரால் காணச் சகிக்காது — அதனாலேதான் அவர், தமிழகத்தில் புயலும் வெள்ளமும் புகுந்து அழிவு ஏற்படுத்திய நேரத்திலும், இப்போது அரியலூர் இரயில் விபத்தால் பயங்கர நாசம் ஏற்பட்ட நேரத்திலும். நேரடியாக வந்து ஆறுதல் கூறவில்லை, அறிமின்! அறிவிலிகாள்! இதைக் காட்டிக் கரிபூசாதீர்! துரும்பைத் தூணாக்காதீர்! என்று வாதாடும் வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். உண்மையா அது என்று பார்த்தால், அல்ல, அல்ல, என்று விளக்கமாகத் தெரிகிறது.

**வடக்கே எங்கு எவ்விதமான விபத்து நேரிட்டுவிட்டாலும், நேரு பண்டிதர், உடனே பறந்து சென்று, பாசமும் நேசமும் காட்டுகிறார், அன்பும் ஆறுதலும் பொழிகிறார்;** இதனை இல்லை என்று எவ்வளவு துணிவுபெற்ற காங்கிரஸ்காரரும் சொல்லிவிடமுடியாது.

**கோசி நதியால் வெள்ள விபத்து.**

**கட்சு பூகம்ப விபத்து**

**அசாமில் வெள்ள விபத்து**

**உத்தரப்பிரதேசத்தில் வெள்ள விபத்து**

இந்தச் சந்தர்ப்பங்களிலெல்லாம் நேரு பண்டிதர் சென்றதும், ஜீப்பிலும் விமானத்திலும் பயணம் செய்து, மக்கள் மத்தியில் நடமாடி ஆறுதல் அளித்ததும், காங்கிரஸ் நண்பர்களுக்கும் தெரியும்.

அங்கெல்லாம் அவதி நேரிட்டபோது, ஓடோடிச் சென்று, உருக்கம் காட்டிய நேரு பண்டிதர், தமிழகத்திலே அழிவு நேரிட்டு, மக்கள் கதறும்போது மட்டும், நேரில் சென்று துக்கத்தைப் பகிர்ந்து கொள்ளவேண்டும், ஆறுதல் கூறி சோகத்தைத் துடைக்கவேண்டும் என்று எண்ணவில்லை. அந்த எண்ணம் இயல்பாக எழாத காரணம் என்ன? ஏன் அந்த மனம் வடக்கே காணப்படும் விபத்துகளின்போது அனலிடு மெழுகாகிறது, தமிழகம் தலைவிரிகோலமாகும்போதுமட்டும், பாறையாகி விடுகிறது? இந்த விசித்திரமான போக்குக்குக் காரணம் என்ன? நாம் கூறும்போது பலருக்குக் கோபம்கூட இருக்கிறது. கவைக்கு உதவாத காட்டுமிராண்டிக் கருத்தென்று ஏசக் கூடச் செய்கிறார்கள். எனினும், இத்தகைய சம்பவங்களின்போதாவது, சிறிதேனும் ஆழச் சிந்திப்பார்களானால், சீற்றமடையும் நண்பர்கள் நாம் வலியுறுத்தி வரும் உண்மையை உணருவார்கள் — வடக்கு வேறுதான்—தெற்கு வேறுதான்!!

தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும் என்பார்களே—அது தமிழகததில் விபத்து நேரிடும்போது நேரு பண்டிதருக்கு ஏற்படுவ்து இல்லை.

ஆனந்த விகடனுக்கே இது ஆச்சரியத்தை மூட்டிவிட்டிருக்கிறது; சிறிது ஆயாசமும் எழுத்திலே தொனிக்கிறது; எண்ணத்தில்மட்டும் நாம் கூறிவரும் உண்மை இடம் பெற மறுக்கிறது! எனினும் ஆச்சரியத்தையேனும் தந்திருக்கிறதே என்று எனக்கு ஓரளவு திருப்திதான். தம்பி! நேருபண்டிதருடைய இந்தப் போக்கு விகடனுக்கு விசாரம் தருகிறது.

> "நமது பிரதம மந்திரி நேருஜீ, அரியலூர் விபத்து நடந்தவுடனேயே ஒரு நிபுணர் கோஷ்டியுடன்கூட, விபத்து நடந்த இடத்துக்கு நேரில் வந்து பார்த்திருக்கவேண்டும் என நாம் கருதுகிறோம். அவர் ஏன் அப்படிச் செய்யவில்லை என்பது ஆச்சரியமாக இருக்கிறது. கோசி நதியில் வெள்ளம் வந்து சேதம் விளைவித்தபோது, அவர் அந்தப் பிரதேசங்கள்மீது பறந்துபார்வையிட்டார். கட்சில்பூகம்பம் நாசம் விளைவித்தபோதும், அசாமிலும் உத்திரப்பிரதேசத்திலும் வெள்ளம் ஏற்பட்டபோதும், அவர் அங்கெல்லாம் நேரில் விஜயம் செய்து பார்வையிட்டார். இதனால் கஷ்டப்படும் மக்களுக்கு ஆறுதல் பெற முடிந்ததோடு நிவாரணவேலைகளும், பாதுகாப்பு ஏற்பாடுகளும், உடனடியாக நடப்பது சாத்தியமாயிற்று"

இவ்விதம் ஆனந்தவிகடனே எழுத நேரிடுகிறது.

**அரியலூர் விபத்து, நேரு பண்டிதரை இங்கு வரவழைக்கவில்லை; ஆனல் தேர்தல் ஆபத்து அவரை இங்கு ஓடோடி வரச் செய்கிறது.**

அரியலூர் விபத்தின்போது நேரு பண்டிதரை, இங்கு வரச் சொல்லி அழைத்து, தமிழ் மக்களின் துயரத்தைக் கண்ணாலே பாருங்கள், என்று காட்டிட, காமராஜருக்கு எண்ணம் எழவில்லை, தேர்தல் ஆபத்து என்றஉடன், வாருங்கள்! மக்களிடை பிரசாரம் செய்யுங்கள்! ஓட்டு வரம் தாருங்கள்! — என்று ஏத்தி ஏத்தித் தொழுது, நேருபண்டிதரை இங்கு அழைத்து வரவேண்டும் என்ற அவசியம் காமராஜருக்குச் சுரக்கிறது.

தம்பி! என் துக்கத்துக்கு மற்றோர் காரணம் என்ன தெரியுமா? இங்கு, காமராஜரையும் அவருடைய கூட்டாளிகளையும் இந்தத் தேர்தலிலே வெற்றிபெறச் செய்வதே இப்போதைக்கு அவசரமான அவசியமான கடமை என்று கூறி, உள்ளன்புடன் பெரியார் பாடுபடுகிறார் — அவருடைய இன்றைய நண்பர்களோ, அந்த நோக்கத்துடன், தினமுனகாளுக்களுடைய பெட்டியிலே, ஒரு ஓட்டுகூடப் போடக்கூடாது, மண்ணை அள்ளிப் போடுங்கள் என்று கூறும் அளவுக்குப் பிரசார இயந்திரத்தை முடுக்கிவிடுகிறார்கள்—காமராஜரின் யோக்யதை என்ன, உன் யோக்யதை என்ன! அட பாவி! அவரைப்போய் எதிர்க்கக் கிளம்புகிறாயே!!—என்று மனம் நொந்து பேசுகிறார்கள், காமராஜர் பக்கம் அணிவகுத்து நிற்கிறார்கள்!

**இருந்தும், பார், தம்பி! காமராஜர், நேரு பண்டிதரைத்தான் அழைத்து வருகிறார், தமிழகத் தேர்தல் பிரசாரத்துக்காக!!**

**சென்ற பொதுத்தேர்தலின்போது, பெரியார், காங்கிரஸ் கட்சியை ஒழித்துக்கட்டுவதற்காகப் பெரும்பணியாற்றினர்; அப்போது அவருடைய பலமான எதிர்ப்பைச் சமாளிக்க, நேரு பண்டிதர் தேவைப்பட்டார்; வரவழைக்கப்பட்டார். இப்போதுதான், பெரியாரின் பேராதரவு காமராஜருக்குக் கிடைத்திருக்கிறதே, நேரு பண்டிதர் வந்திருந்து உதவிசெய்யவேண்டிய அவசியம் என்ன?**

முன்புஇருந்ததைவிடத்தமிழகத்தில் காங்கிரசுக்குச் செல்வாக்கு அமோகமாகிவிட்டது; காமராஜரின் வீரமும் தீரமும் வேலைப்பாடும் மிகுந்த நன்மைதரும்திட்டங்களின் காரணமாக, எதிர்ப்புகள் பட்டுப் போயின, புது உறவுகள் பூத்துக் காய்க்கின்றன என்கிறார்கள்— எதிர்த்து நிற்கும் நாமோ, அற்பர்கள், அலட்சியப்படுத்தத்தக்கவர்கள் என்கிறார்கள்; இந்த நிலையில் காமராஜர் ஏன், நேரு பண்டிதரை வரவழைக்கிறார்!

பெரியார் எனக்காகப் பிரசாரம் செய்கிறார் — செய்யட்டும் — ஆனல் அது போதாது— காங்கிர

சுக்கு வெற்றி கிடைக்கவேண்டுமானால், பாரெல்லாம் புகழ்பெற்ற பஞ்சசிலப் பண்டிதர், நேரு, வரவேண்டும் — அப்போதுதான் இலட்சக் கணக்கிலே மக்கள் கூடுவர், கொண்டாடுவர், அப்போதுதான் ஓட்டுகள் குவியும் என்று அல்லவா, காமராஜர் எண்ணுவதாகத் தெரிகிறது!! இது எனக்கு ஏற்பட்டுள்ள, துக்கத்துக்கு உள்ள இரண்டாவது காரணம்.

பெரியாரின் பேரன்பர்கள் இதற்கெல்லாமா மனம் உடைந்து போவார்கள்! என்ன ஆணவம் இந்தக் காமராஜருக்கு! நமது பெரியாரின் பேராதரவு இடைவிடாது கிடைத்திருக்கும்போது, இந்தக் கண்ணீர்த் துளிகளையும் கம்யூனிஸ்டுகளையும், பிரஜாக்களையும், சோஷியலிஸ்டுகளையும், உதிரிகளையும் பூண்டோடு ஒழித்துக்கட்டிவிட்டு, பிறகு திராவிட நாடு பெறுவது போன்ற வேலையில் ஈடுபடுவோம் என்று சூள் உரைத்துவிட்டு, சுறுசுறுப்புடன், விறுவிறுப்புடன் நாம் பணியாற்றி வருகிறதைக் கண்ணாலே கண்டான பிறகு இந்தக் காமராஜர்' தேர்தல் பிரசாரத்துக்காக, நேரு பண்டிதரை வரவழைக்கிறேன் என்று அறிவிக்கிறாரே! இது தகுமா? முறையா? தேவையா? நம்மைப்பற்றி அவர் இவ்வளவு தாழ்வாகவா கருதுவது! என்றெல்லாம் எண்ணவா போகிறார்கள்!! நான் அப்படி நினைக்கவில்லை. **இந்த ராஜகோபாலாச்சாரியார் என்ன, இப்படிக் கெட்டுவிட்டாரே! ராமசாமிப் பெரியாரின் தரத்துக்கு வந்துவிட்டாரே! என்று காமராஜர் கேவலப்படுத்திப் பேசியதைக் கேட்டே, சகித்துக்கொண்டவர்கள், இப்போது ஏன் கோபம் கொள்ளப்போகிறார்கள்!**

“நல்ல பிரபலமான சர்ஜனை வரவழைத்துக் காட்டப்போகிறேன்” என்று கூறுவது கேட்டால், அதுவரை வைத்தியம் பார்த்துவந்த டாக்டருக்குக் கோபம் வரும்—தன்னை மரியாதைக் குறைவாக நடத்துகிறார்கள் என்று மனவேதனை ஏற்படும். காமராஜரோ துணிந்து, நானொன்றும் பெரியாரை நம்பிக்கொண்டில்லை, பெரியாரின் பிரசாரம் போதும் என்று திருப்திப்பட்டுக்கொண்டில்லை, பெரியாரின் துணை தேர்தலில் வெற்றி தந்துவிடும் என்று சும்மா இருந்துவிடமாட்டேன், நான், என் நேருவை வரவழைக்கிறேன் என்று சொல்லுகிறார்.

இந்த அவருடைய மனப்பான்மை எனக்குத் துக்கத்தைத் தருகிறது.

எப்படியோ ஒன்று, நேரு பண்டிதர் வருகிறார், தேர்தல் பிரசாரம் செய்ய—அரியலூர் விபத்தின்போது தமிழகத்தை அலட்சியப்படுத்தியவர், புயல் வெள்ளக் கொடுமையின்போது தமிழகத்தை எட்டிப் பார்த்திட மனமற்று இருந்தவர், தேர்தலுக்காக தமிழ்நாடு வருகிறார்! வரட்டும்! தமது செல்வாக்கை வழங்கட்டும்! ஈளை கட்டி இருமிக்கொண்டிருக்கும் நோயாளியைப் பிழைக்கவைக்கட்டும்—தம்பி—எனக்கு அதுபற்றித் துளியும் கவலை இல்லை. ஆனால் இதுபோன்ற சம்பவங்கள், தமிழ்நாட்டை எவ்வளவு உதாசீனப்படுத்துகிறார்கள், எத்துணை அலட்சியம் காட்டப்படுகிறது என்பதை எடுத்துக்காட்டுவதாக அமையும்போதுதான் வேதனை குடைகிறது.

ஒவ்வொரு முனையிலும் இந்த நிலை காண்கிறோம் — ஒவ்வொரு முனையிலும், இந்தப் போக்கினாலே கஷ்ட நஷ்டம அடைபவர்கள், மனம் குமுறுகிறார்கள், சில வேளைகளிலே கண்டனத்தைக் கூட வெளியிடுகிறார்கள்—ஆனால்; தொடர்ந்து நடைபெறும் இந்த ஓரவஞ்சனையை—மாற்றாந்தாய் மனப்பான்மையை — மாற்றிட பொதுவான, பலமான, முயற்சி எடுத்திட முன்வருவதில்லை! ஆபத்தின்போது அவரவர்கள் தத்தமது உயிரையும்உடைமையையும் பாதுகாத்துக்கொண்டால்போதும் என்று இருந்துவிடுவதுபோல, நம் வரையில் சலுகை கிடைத்துவிட்டால் போதும், ஊர்த்தொல்லையைத் தூக்கி நாம் நம் தோளில் போட்டுக்கொள்வானேன் என்று இருந்து விடுகிறார்கள். இந்தப் போக்கு தெரிகிறது பண்டிதருக்கு; எனவேதான் அவர் அரியலூர் விபத்தின்போது கண்ணீரைத் துடைக்க இங்கு வரவில்லை, ஓட்டுகளைத் தட்டிப் பறித்திடமட்டும் வர இருக்கிறார்.

இவருடைய இந்தப் போக்கு நியாயமா? இவர் ஈவு இரக்கம், மனிதாபிமானம், மக்களாட்சிக்குத் தேவையான கடமை உணர்ச்சி ஆகிய தூய்மைகொண்ட உள்ளத்தினர்தானா என்றெல்லாம் ஆராய்வதற்காக நான் இதனை விளக்கினேன் இல்லை! நமது நாட்டுக்குத் தரப்படும் நிலையைப்பற்றி, நாட்டுப் பற்றுக்கொண்டோரனைவரும் எண்ணிப் பார்த்திட வேண்டும் என்பதற்காகவே இதனை விரிவாகக் கூறினேன்.

தமிழ்நாடு, இந்தத் தாழ்நிலைக்குக் கொண்டுவந்து வைக்கப்பட்டிருப்பதைக் காட்டிடும் நிகழ்ச்சிகள் பலப்பல. அதில் இது ஒன்று.

**தமிழகம் தவித்தபோது இங்குவராத நேருபண்டிதர், ஓட்டு கேட்கமட்டும் வருகிறார்,** என்பது வேதனை தருகிறது; அதுபோலவே காங்கிரசுக்கு ஓட்டு அளிக்கும்படி மக்களிடம் பேசிட, தமிழகத்துக்குத்தான் நேரு வருகிறாரே தவிர, வங்கத்துக்குக் காமராஜர் போகிறார் இல்லை, பாஞ்சாலத்துக்கு பக்தவத்சலம் பறக்கிறார்என்று இல்லை. இது வெட்கமும் வேதனையும் தருகிற நிலைமையாகும். ஆனால் இரண்டு என்ன—எத்தனையையும் ஏற்றுக்கொண்டு பதவியில் ஒட்டிக்கொண்டிருக்க இங்கு காங்கிரஸ் கனவான்கள், தயாராக இருக்கிறார்கள்.

**தேவிகுளம்**
**பீர்மேடு**
**நெய்யாற்றங்கரை**
**கொச்சின்-சித்தூர்**
**பாலக்காட்டுத் தமிழ்ப் பகுதி**

தமிழருக்கு இல்லை! என்று டில்லி உத்தரவு பிறப்பித்தது—ஐயனே! மெய்யனே! இதோ பாரும் புள்ளி விவரம்! இந்தப் பகுதி எல்லாம் தமிழருக்கே உரியது என்பது விளங்கும் என்று, 'இருந்து முகந்திருத்திக்' கூறினர்; “என்னிடம் புள்ளிவிவரம் காட்டவா துணிகிறீர்கள்!” என்று நேரு பண்டிதர் உருட்டுவிழி காட்டினார், “எமை ஆளும் கோவே! பிழை பொறுத்திடுக! பெருங்கோபம் விடுத்திடுக! குளமாவது மேடாவது! குணாளா! உன் குளிர்மதிப் பார்வைபோதும் எமக்கு! தேவிகுளம் போனாலென்ன, தேவதேவா! உன் திருப்பார்வை பட்டால் போதாதா! அந்தப் பகுதி அனைத்தும் அளித்துவிடுகிறோம். அதுமட்டுமல்ல, எமை ஆளாக்கிவிட்ட ஆற்றலரசே! செங்கோட்டையில் ஒரு பாதியையும் தருகிறோம், பெற்றுக்கொள்க!—என்று கூறிவிட்டு வந்தவர்களல்லவா கோலோச்சுகிறார்கள்.

இலங்கையில் தமிழர்களைப் படுகொலை செய்கிற பண்டார நாயகாவின் ஆட்சியின் போக்குப்பற்றி, ஒருதுளியும் டில்லி நடவடிக்கை எடுத்ததில்லை—சிறிதளவு அதக்

டிக் கேட்கலாகாதா, அவனி புகழ ஒரு காலத்தில் வாழ்ந்த இனமாயிற்றே எமது தமிழர், சிங்களத்தை எமது மன்னன் வென்று, அந்தப் போரிலே பிடிபட்ட சிங்களவர்களைக்கொண்டு, காவிரிக்குக் கரை அமைத்தான் என்று கல்லில் பொறித்திருக்கிறார்களே! அத்தகைய வீரமரபினர், இன்று ஓட்டாண்டிகளாக மட்டுமல்ல, நாடற்றவர்களாக ஆக்கப்படுகிறார்களே, கள்ளத்தோணிகள் என்று கேவலப்படுத்தப் படுகிறார்களே— இதற்குப் பரிகாரம் காண ஒரு சிறு முயற்சி எடுத்திட வேண்டாமா — பாதகம் விளைவிக்கும் பண்டாரநாயகாவின் ஆட்சிக்கு நல்லறிவு கொளுத்தவேண்டாமா? என்று கேட்டனரோ நமது மந்திரிமார்! இல்லை! கேட்டால், மந்திரிப் பதவி நிலைக்காதே என்ற மருட்சியால், வாய் அடைத்துக்கிடந்தனர்!

ஒவ்வோர் சமயத்திலும் இதே போக்குத்தானே கண்டோம். மனம் குமுறிப் பேசினர் பலரும், எனினும் நிலைமையில் எந்த மாறுதலும் ஏற்படவில்லை: ஒவ்வொரு துறையிலும் டில்லி ஆதிக்க உணர்ச்சியையும், தமிழரின் நியாயமான 'கோரிக்கைகளை'க் கூட அலட்சியப்படுத்தும் போக்கையும் காட்டிக்கொண்டேதான் வருகிறது.

சென்னை மந்திரிமார்களிலேயே மார்தட்டிப் பேசுவதில் முதல் தாம்பூலம் பெற்றவர், நிதி அமைச்சர்.

நமது கழகப் பெயர் கேட்டாலே அவர் நெரித்த புருவத்தினராகிறார்.

நமது கழகத்தைத் தாக்கிப் பேசக் கிளம்பினாலோ, பற்களை நறநறவெனக் கடிக்கிறார்.

அப்படிப்பட்ட 'வீரதீரமிக்கவர்' இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில் துறையிலே பின்தங்கி இருக்கும் சென்னைக்கு, முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே புறக்கணிக்கப்பட்டுப்போன சென்னைக்கு, 400-கோடி ரூபாயாவது தரவேண்டும் என்று கேட்டார். கரம் கூப்பினார், கண்ணைப் பிசைந்துகொண்டார், 'கஷ்டத்தைப் பார்த்துக் கூலிகொடுங்கள் எஜமானே! உங்கள் வாய்க்கு வெற்றிலைபாக்கு, நம்ம வயிற்றுக்குச் சோறு!' என்று கெஞ்சுவார்களே — அதுபோலெல்லாம் கேட்டுப் பார்த்தார், என்ன நடந்தது என்பதைத் தம்பி, நாடறியுமே! கேட்டது 400-கிடைத்தது 170! இந்த இலட்சணத்தில் இருக்கிறது தொடர்பு. காட்டும் வீரம் அத்தனையும், இங்கே, நம்மிடந்தானே! டில்லி சென்றதும், எவ்வளவு அடக்க ஒடுக்கம், பயபக்தி, ஏ! அப்பா! என்ன சொன்னால், நேரு பண்டிதருக்குக் கோபம் வந்துவிடுமோ—அதன் பயனாகப் பதவிக்கு ஆபத்து நேரிடுமோ என்ற திகில், இவர்களை தஞ்சாவூர் தலையாட்டிப் பொம்மைகளாக்கிவிடுகிறது! இங்கே, பார் வீரதீரத்தை! குட்டுபவனுடைய கரத்தில் மோதிரம் இருந்தால், வலியையும் தாங்கிக்கொண்டு "ஆஹா! அருமையான வைரம்! அற்புதமான பூரிப்பு"—என்று பாராட்டுகிறார்கள்.

கலைத்துறை, கல்வித்துறை, வணிகத்துறை எனும் பல்வேறு துறைகளிலே நடைபெறும் அநீதிமிக்க போக்கை தம்பி! நான் அவ்வப்போது விளக்கித் தருகிறேன், இதனைக் கண்ணுறும் காங்கிரஸ் நண்பர்கள் என்ன எண்ணுகிறார்களோ தெரியவில்லை. நாடு, மட்டும் நிச்சயமாக, அறிந்து ஆறாத் துயரம் கொண்டிருக்கிறது. நேருபண்டிதரைக் கண்டால் அந்தத் துயரமும் கோபமும், பகலவன் முன்பனி போலாகும் என்று காமராஜர் கருதுகிறார் — பலமுறை அது போலாகி இருக்கிறது—இம்முறை அது பலிக்கப்போவதில்லை; மக்கள் மனம், கொந்தளித்துக் கொண்டிருக்கிறது.

நாம், மட்டுமல்ல தம்பி, நாட்டிலே உள்ள பல்வேறு முற்போக்குக் கட்சிகளும், தமிழர் மிகப்பெருவாரியாகக் குடியேறி உள்ள வெளிநாடுகளுக்காகிலும், தமிழர்களையே தூதுவர்களாக அனுப்பிவைக்க வேண்டும் — இது உரிமைப் பிரச்சினை என்றுகூட அல்ல, வசதியைக் கவனித்தாலே, இதுபோலச் செய்வதுதான் திறம் தரும் என்பதை வலியுறுத்திக் கூறியபடி உள்ளன.

பொதுக் கூட்டங்கள் பலவற்றிலே, மன்றங்களிலே, மாநாடுகளிலே, விளக்கப்பட்டு, வேண்டிக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

தமிழர்களைத் தூதுவர்களாக அனுப்புவதால், டில்லிக்கு நஷ்டம் ஏதும் ஏற்படப்போவதுமில்லை, அதனைச் செய்வதிலே கஷ்டமும் எழாது.

இங்குள்ள தமிழர்களும் இதை விரும்புகிறார்கள், குடி ஏறியுள்ள தமிழர்களும் ஆவலுடன் வரவேற்கிறார்கள்.

எனினும் இந்த ஒரு சிறிய காரியத்திலேகூட, டில்லி தன்போக்கை மாற்றிக்கொள்ளவில்லை! மேதைகள் கேட்கிறார்கள், காதிலே ஏறவில்லை! அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்ட பிரமுகர்கள்கூடக் கேட்கிறார்கள், அதனையும் டில்லி பொருட்படுத்த மறுக்கிறது. தொடர்ந்து, துணிந்து, எல்லா இடங்கட்கும், வடக்கிலிருந்தே தூதுவர்களை அனுப்புகிறது— அதிலும் குறிப்பாக, தமிழர்கள் மிகப் பெருவாரியாகக் குடி ஏறியுள்ள நாடுகளில்! நியாயமா? கேட்டுப்பாரேன், காங்கிரஸ்காரர்களை. "என்ன தோழரே! செய்வது!" என்று பரிதாபத்தோடு சிலரும், "இதெல்லாம் ஒரு பெரிய, பிரமாதமான பிரச்சினை அல்ல' என்று அலட்சியத்தோடு சிலரும் பேசுவர் —ஆனால் அந்தக் காங்கிரஸ்காரர் மனதிலெல்லாம் நிச்சயமாக, கசப்பு முற்றிக்கொண்டுதான் வருகிறது. இதை, நேருவின் விஜயம் மாற்றிவிடாது.

நேரு பண்டிதர் தமிழகத்துக்கு வந்து பிரசாரம் செய்தால்தான், காங்கிரசை எதிர்த்துத் தேர்தலில் ஈடுபடும் நமது கழகத்தின் செல்வாக்கைச் சிதைத்திட முடியும் என்று காமராஜர் கணக்குப்போடுவது தவறு என்பது மட்டுமல்ல, அவர் அந்தக் கணக்குப் போடுவதன் மூலம், நமது கழகத்திடம் எவ்வளவு கடும் கோபம் கொண்டிருக்கிறார் என்பது தெரிகிறது மட்டுமல்ல, பெரியாரின் துணையை அவர் போதுமானது என்று எண்ணவில்லை என்பது தெளிவாகிறது.

காமராஜர் கருதுவதுபோல் நேரு பண்டிதர் இங்கு வந்து, பேசுவதன் மூலம், நமது கழகத்துக்குப் புதிதாக ஏதேனும் ஓர் எதிர்ப்பு கிளம்பும் என்று நான் நம்பவில்லை! நேரு பண்டிதருக்குப் பாவம், சர்வதேச நிலைமையை விளக்கிட, தனக்கும் பிறநாட்டுத் தலைவர்களுக்கும் உள்ள தொடர்புகளைச் சித்தரித்துக் காட்டவே நேரம் போதாது! மேலும் தம்பி! நமது கழகத்தைத் தாக்கிட, நமது கழகத்திலுள்ள பணியாளர்களை, குறிப்பாக உன் அண்ணனைப் பற்றி,

அடுத்துக் கெடுப்பவர்
உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்வோர்
ஊர் சுற்றிகள்

என்று கடுமையாகவும், காரசாரமாகவும் பேசிடவா தெரியும்! அதற்கெல்லாம் பெரியார் இருக்கிறார்! வேறு எதற்காக நேரு பண்டிதரைக் காமராஜர் வரவழைக்கிறாரோ தெரியவில்லை.

காரணம் எதுவாயினும், தம்பி, நேரு பண்டிதரின் 'விஜயம்', இங்குள்ள பொதுமக்கள் மனதிலே, பல்வேறு சம்பவங்களின் மூலமாக மூண்டு கிடக்கும் கசப்பினைப் போக்கிடப் போவதில்லை என்பது மட்டும் உறுதி.

நேரு பண்டிதரைப் பார்க்கும் போதே, புயலின்போது நாம் புலம்பிக் கிடந்தபோது வராத நேரு, வெள்ளக்கொடுமையிலே மூழ்கி வதைபட்டபோது வராத நேரு, அரியலூரில் விபத்தினால் கதறித் துடித்தகாலை வராத நேரு, இப்போது ஓட்டுக்காக மட்டும் வந்திருக்கிறார், பாரீர்! என்ற எண்ணத்தை உமிழும் கண்களுடன் தான் மக்கள் இருக்கப்போகிறார்கள்.

ஒவ்வொரு துறையிலும் தமிழர்களின் முகத்தில் கரி பூசப்படும் கொடுமைக்கு யார் தலைமை வகித்திருக்கிறாரோ, அந்த நேரு இவர்தான் என்றுதான் பார்க்கப்போகிறார்கள்.

> "தமிழ் மக்கள் குடி ஏறி இருக்கும் நாடுகளான இலங்கை, பர்மா, மலேயா, தென்னாப்பிரிக்கா, முதலிய நாடுகளில், தமிழர்கள் தூதுவர்களாக நியமிக்கப்படுவதே, பொருத்தமுடையதாகும். தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவர்கூட கவர்னராயில்லாவிட்டாலும், தூதுவர் பதவிகளிலாவது தமிழர்களுக்குச் சிறப்பளிக்கக் கூடாதா? உலகமெல்லாம் புதுப்புது இடங்களில் தூதுவர்கள் நியமிக்கப்பட்டு வரும்போது எங்காவது ஒரு தமிழருக்குக்கூட இடமில்லை என்பது வருந்தத்தக்கது. தமிழ்நாட்டு அரசியலில் காங்கிரசு கட்சியிலும், பிற கட்சிகளிலும், கட்சிச்சார்பற்ற நிலையிலும், கல்விச் சிறப்பு, கலைப் பண்பு, பிறநாட்டு அனுபவம் முதலிய தகுதிகளுடைய சிலர் கூடவா, புதுடில்லி அரசினருடைய தொலை நோக்கிற்குப் புலப்படவில்லை? மேலும் தமிழர்களே மிகப் பெரும்பான்மையினராகவுள்ள புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளுக்கு ஒரு தமிழரை, இந்தியப் பிரதிநிதியாக ஏன் நியமிக்கக் கூடாது? மக்களுடைய மொழியறியாத ஒருவரை எதற்காக நியமிக்கவேண்டும்?

தம்பி! இப்படி எழுதும் ஏடு, தி. மு. க. முகாமைச் சேர்ந்தது அல்ல! மதுரை 'தமிழ்நாடு' — நேரு பண்டிதரின் விஜயத்தின்போது, இந்த ஏட்டதிபரின் மாளிகைக்குக் கூடச் செல்லக்கூடும்—வேண்டியவர்தான் ஆட்சியினருக்கு — எனினும், மனம் வெதும்பத்தான் செய்கிறது, இவர்போன்றாருக்கும். காரணம் என்ன? தொடர்ந்து தமிழர் அவமதிக்கப்பட்டு வருவது, வெளிப்படையாகவே அவமதிக்கப்படுவது, சுயநலத்தால் பீடிக்கப்பட்டுப்போனவர்களுக்குத் தவிர பிற அனைவருக்கும், மனவேதனையைத் தருவதாகத்தான் இருக்கிறது.

அந்த வேதனையை நேரு பண்டிதரின் விஜயம் போக்கிவிடாது— எரிகிற தழலுக்கு எண்ணெய்தானாகும்!

'தனி நாடு' என்று கேட்பது தவறு, தீது, தேவையற்றது என்று காரணம் காட்டி, நம்மீது கடிந்துரைக்கும் போக்கினரெல்லாங்கூட, எல்லா அதிகாரங்களும் வசதிகளும் வாய்ப்புகளும், உரிமைகளும் டில்லியில் — மத்திய சர்க்காரில் குவிந்துவிட்டிருப்பதைச் சுட்டிக் காட்டி, இது தவறு, தீது, தேவையற்றது என்று எடுத்துக் காட்டுகிறார்கள்.

இந்த நிலைமை மாற்றப்பட்டாக வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள்.

மாகாணங்களுக்கு — மாநிலங்களுக்கு—இராஜ்யங்களுக்கு இன்று உள்ள அதிகாரங்கள், போதாதன; இந்த அளவுக்கு அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளதால், அந்தந்த மாநிலங்கள் தத்தமது ஆட்சியின் கீழ் உள்ள மக்களின் செல்வ வளர்ச்சிக்கான, நல் வாழ்வுக்கான திட்டங்களை நிறைவேற்றிவைக்க முடியவில்லை என்று குறைபட்டுக் கொள்கிறார்கள்.

வடக்கு வேறு, தெற்கு வேறு என்று பேசுவது அவர்களுக்குக் கசப்பாக இருக்கிறது.

இனப் பிரச்சினையை எழுப்பினாலே, கடுப்பெடுக்கிறது.

எனினும், அவர்கள் அனைவருக்குமே எங்கோ ஓர் 'சுருதிபேதம்' இருப்பது தெரிகிறது.

அவர்கள், மாகாணங்களுக்கு அதிகமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று வாதாடுவதும், வாதங்கள் பலிக்காது போனால் போராடுவதும்தான் அரசியல்; வடநாடு—தென்னாடு என்று குறிச் சொற்களைக் காட்டிப் பேசுவது 'காட்டுமிராண்டித்தனம்' என்று எண்ணிக்கொள்கிறார்கள்; தம்பி, இவர்களின் அரசியலாவது வெற்றிபெறுகிறதா? அதுதான் இல்லை.

ஏற்கனவே உள்ள அதிகாரங்கள் போதாமல், மேலும் மேலும் மத்திய சர்க்காரிலே அதிகாரங்களைக்கொண்டுபோய் குவித்துக் கொள்ளும் போக்குத்தான் காண்கிறோம்.

வடக்கு—தெற்கு என்று பேசுவது அறிவுடைமை அல்ல என்று கருதும் "நகாசு" வேலைக்காரர்களையே கேட்கிறோம், அந்தப் பேதம் ஆகாது என்றால், ஏன் தமிழனுக்கு உரிமை தரவில்லை, தமிழனை ஏன் உயர் பதவியில் அமர்த்தவில்லை, தமிழனை ஏன் தூதுவர்களாக்கவில்லை என்று எப்படிக் கேட்கத் தோன்றுகிறது!

லங்காஷயர்காரருக்கே பதவியா? வேல்ஸ்காரருக்கே விருதுகளா? ஷெப்பீல்டுகாரர்களுக்கே பட்டமா? என்று இங்கிலாந்தில் கேட்பதில்லை; காரணம், அங்குள்ள மக்கள் அனைவரும் தம்மை ஆங்கிலேயர் என்று நம்புவதால் — அந்த எண்ணம் குருதியில் கலந்துவிட்டிருப்பதால்!

இங்கும் அதுபோல, நேருபண்டிதரும், அவர் கூறுகிறாரே என்பதாலே பிறரும், அனைவரும் இந்தியர் என்று பேசுகிறார்கள்.

கேள்வி:- மக்கள் தொகை பெருகாமல் தடுக்க என்ன செய்யலாம்?

பதில்:- இந்திய இரயில்களை இன்னும் அதிகமாக ஓட்டிவிடலாம்!

*இந்தப்பேச்சு, உண்மை உணர்ச்சியை, இயற்கையைக் காட்டுவதாக இருந்தால், அடிக்கடி பல்வேறு துறைகளிலேயும்,* **நம்மைப் புறக்கணித்து விட்டார்கள், நமது நலன்கள் பாழாக்கப்பட்டுவிட்டன; நமது உரிமைகள் அழிக்கப்படுகின்றன; என்ற குமுறல் எழக் காரணம் என்ன?**

> **"இன்று இந்தியாவில் எந்த இராஜ்யத்திலும் தமிழர், கவர்னராக இல்லை. இந்தியாவின் மற்றப் பகுதிகளில் கிடைக்காதபதவி தமிழருக்கு தமிழ் நாட்டிலேயாவது கிடைக்கட்டுமே.**
>
> **தமிழ் நாட்டுக்கு ஒரு தமிழ்க் கவர்னரை நியமிக்க வேண்டும் என்று நமது அமைச்சரவை மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டால், டில்லியில், யாருக்கும் மூர்ச்சை போட்டுவிடாது."**

*தம்பி! 'குமுதம்' இதுபோல் எழுதிடக் காணகிறேன்! ஏன், இந்த* **ஆவல்** *எழுகிறது! தமிழனுக்கு, இந்தியாவிலே எந்த இடத்திலும் கவர்னர்பதவி இல்லையே என்ற ஏக்கம் ஏன் எழுகிறது!*

> **தமிழருக்குத் தமிழ் நாட்டிலேயாவது**

*என்பதிலே தொக்கி நிற்கும் துயரத்துக்குக் காரணம் என்ன?*

*இந்தியர் என்று பேச முடிகிறதே தவிர, பேசுவது இன்றைய அரசியல் நாகரீகம் என்று கருதுகிறார்களே தவிர, அதிலே ஆழ்ந்த நம்பிக்கையோ, பற்றுபாசமோ இல்லை — இயற்கையாக எழுவதில்லை!*

*தமிழ்நாட்டுக்குத் தமிழர் கவர்னர் ஆகவேண்டும் என்று எண்ணச் செய்யும் உணர்ச்சிக்கு 'குமுதம்' என்ன பெயரிடுகிறதோ, நான் அறியேன்! எனக்கென்னவோ, நாமக்கல் கவிஞரின் பாடல் செவியில் விழுகிறது,*

> **தமிழன் என்றோர் இனம் உண்டு**
> **தனியே அவர்க்கோர் பண்பு உண்டு**

*அவ்வளவு பச்சையாகச் சொன்னால், அண்ணாத்துரைக்கும் நமக்கும் ஒரு வித்தியாசமும் தெரியாமல் போய்விடுமே, நாமென்ன அவன்போலவா, அரசியலில் அந்தஸ்து குறைந்த நிலையில் இருக்கிறோம், என்ற எண்ணம், பலருக்கு உண்டு என்பதை நான் அறிந்திருக்கிறேன்.*

*தம்பி! இதிலே இன்னொரு வேடிக்கையைக் கவனித்தாயா?*

> **தமிழ் நாட்டுக்குத் தமிழ்க் கவர்னரை நியமிக்க வேண்டும் என்று நமது அமைச்சரவை மத்திய அரசாங்கத்தை கேட்டுக் கொண்டால் டில்லியில் யாருக்கும் மூர்ச்சை போட்டுவிடாது."**

*என்ற வார்த்தை இருக்கிறதே, அதிலே உள்ள நயங்களும் அதற்குள்ளேபுதைந்துள்ளஉணர்ச்சிகளும், பலமுறை படித்துப் படித்துப் பார்த்தால்தான் அறிந்து ரசிக்க முடியும்.*

## நமது அமைச்சரவை!

*தம்பி! இதிலே, பாசமும் பரிவும், அன்பும் அக்கரையும், உரிமையும் உறவும் எல்லாம் அந்த* **நமது** *என்ற சொல்லுக்குள்ளே வைத்து இழைத்துத் தருகிறார் அந்த ஆசிரியர்!! வாழ்க, அவர்தம் தமிழ் உள்ளம்!!*

*நமது அமைச்சரவை, தமிழ் நாட்டுக்கு*

> **நல்லவரை**
> **திறமைசாலியை**
> **அனுபவமிக்கவரை**

*கவர்னராக நியமியுங்கள் என்று கேட்கவில்லை,*

> **தமிழ்க் கவர்னரை**

*நியமிக்க வேண்டும் என்று கேட்கிறார்.*

*இனித் தம்பி, தமிழ் நாட்டின் அவலநிலையைக் காட்டுகிறாரே, அந்தச் சுவையைப் பார்!*

> *தமிழ் நாட்டுக்குத் தமிழ் கவர்னரை நியமிக்கும்படி மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ள வேண்டுமாம்.*

*மத்திய அரசாங்கத்திடம் அந்த அதிகாரம் சேர்க்கப்பட்டிருக்கிறது என்பது விளங்குகிறது என்பாய். தம்பி! ரசம் அதிலே இல்லை.*

> பணிக்கர்பட்டியிலுள்ள கழகக் கட்டிடத்தின் படம் அடுத்த இதழில் வெளியிடப்படும்.

> **மத்திய அரசாங்கம்**

*என்று மீட்டுமே கூற ஆசிரியரின் மனம் இடந்தருகிறது. நமது மத்திய அரசாங்கம்என்று சொல்லக் கூச்சமாக இருக்கிறது. நமது அமைச்சரவை என்று, உரிமையோடும் பெருமையோடும் கூறுவதற்கு முடிகிறது, மத்திய அரசாங்கம் என்று மட்டுமே, பந்தம் சொந்தம் அற்ற முறையிலே சொல்ல முடிகிறது.*

*பாவி! நான் மிகப் பாடுபட்டு உள்ளத்து உணர்ச்சிகளை திரை போட்டு வைக்கிறேன், கிளறிக் கிளறிக் காட்டித் தொலைக்கிறாயே, தேசிய முகாமின் தீப்பொறி கிளம்புமே...என்று ஆசிரியர் ஆயாசப் படக்கூடுமே என்பதுபற்றி, தம்பி, நான் பலமுறை எண்ணிப் பார்த்தேன்; என்ன செய்வது; அவருக்குக் கஷ்ட நஷ்டம் வருவதானாலும், இதனை நான் எடுத்து விளக்குவது தமிழருக்கு இலாபம் அல்லவா!!*

*தமிழ்நாட்டுக்கு தமிழரை கவர்னராக நியமிக்கும்படி நமது அமைச்சரவை மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளவேண்டும் என்று யோசனை கூறியதும், ஆசிரியருக்கு வேறோர் யோசனை வருகிறது.*

> *நமது அமைச்சர்கள், டில்லியின் கோபம்கிளம்பிடும்என்று மருளக் கூடியவர்களாயிற்றே! என்ற எண்ணம் வந்தது.*

*உடனே, நமது அமைச்சரவைக்கு தைரியம் கொடுக்கிறார்,*

> **மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டால் டில்லியில் யாருக்கும் மூர்ச்சை போட்டு விடாது!**

*என்று கூறுகிறார்!*

*ஏண்டா! இப்படிப் பயந்து' தொடை நடுங்கியாக இருக்கிறாய்! உயிர் ஒன்றும் போய்விடாது— என்று கோழைக்கு அச்சமற்றவன் கூறுவதிலே உள்ள 'ரசம்' இதிலே இருக்கிறதல்லவா? ஆம், அண்ணா, என்பாய், தம்பி, இத*

னிலும் மேலான 'ரசமும்' இருக்கிறது, கேள்.

அமைச்சரவையின் அச்சத்தைப் போக்கி, தைரியமாகத் தமிழ்நாட்டுக்குத் தமிழ் கவர்னர் வேண்டும் என்று கேளுங்கள், டில்லியில் யாருக்கும் மூர்ச்சை போட்டுவிடாது — என்று வீரச் சூரணம் தருகிறாரல்லவா 'குமுதம்' ஆசிரியர், அவரைப் பார்த்து,

> தமிழ் நாட்டுக்கு யார் கவர்னராவது என்பதைத் தீர்மானிக்கும் உரிமை ஏனய்யா மத்திய அரசாங்கத்திடம் இருக்கவேண்டும்? தமிழ் நாட்டு அரசிடமே அந்த உரிமை இருத்தலாகாதா? தமிழ்நாடு தனி நாடு என்ற நிலை ஏற்படுமானால் காவடி தூக்கும் கேவலம் எழாதல்லவா! —

என்று கூறிப்பார்! **ஆசிரியருக்கு மூர்ச்சைபோட்டுவிடும்!!**

ஆசிரியர்கள் நிலையே இது என்றால், அமைச்சர்கள் அச்சம் கொள்வதிலும், ஆமையாவதிலும், ஊமையாவதிலும் ஆச்சரியப்படுவானேன்!

பிரச்சினை இதுதான், தம்பி. பலருக்கும் நன்றாகத் தெரிகிறது தமிழகத்தின் தாழ்நிலையும், அதற்கான சூழ்நிலையும். உள்ளமும் குமுறச் செய்கிறது. அதனை எடுத்துக் காட்டிப் பரிகாரம் கேட்பதிலே, ஈடுபட்டால், 'உள்ளதும்' போய்விடுமோ என்றுகூட சிலர் அஞ்சுகிறார்கள். மீண்டும் காங்கிரஸ் கட்சிக்கே வெற்றி என்று இந்தத் தேர்தல் முடிவு இருக்குமானால், 'மத்திய அரசாங்க' ப்பிடி, இரும்புப் பிடியாகிவிடும் என்ற நிலைமை இருக்கிறது. இதனை நன்கு உணர்ந்துள்ள யாரும், நேரு பண்டிதரின் 'திக்விஜயத்தி'னால், தங்கள் நெஞ்சிலே மூண்டுள்ள நெருப்பை அணைத்துக்கொள்ள முடியாது. எரிகிற தழலில் எண்ணெய்தான், நேரு பண்டிதரின் பவனி!!

அண்ணன்,

அண்ணாதுரை

# தி. மு. க. வளர்கிறது

**[சுதந்திரன் அரசியல் நிருபர்]**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நடவடிக்கைகளைப் பற்றியும் வெளிநாட்டுத் தொடர்புகளைப் பற்றியும் இலங்கை அரசாங்கம் எச்சரிக்கையோடு இருக்க வேண்டுமென்று ஒரு அந்தரங்க அறிக்கையை புது டில்லியிலிருக்கும் இலங்கையின் இந்தியத் தூதுவர் சேர் எட்வின் ஏ. பி. விஜயரத்ன, பிரதமர் பண்டாரநாயகாவிற்கு அனுப்பியிருப்பதாகத் தெரியவருகிறது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியார் நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு பிரபல தென் இந்தியப் பத்திரிகைகள் காட்டிய ஆதரவைக் கண்டு அதிர்ச்சியடைந்த இலங்கை அரசாங்கம் சேர் விஜயரத்னவைச் சென்னைக்குச் சென்று இலங்கை அரசாங்கத்தின் சார்பில் 'தனி நபர் பிரச்சாரம்'' செய்யும்படி பணித்தது. சேர் விஜயரத்ன சென்னை செல்வதற்கு சில தினங்களுக்கு முன்புதான் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. ஸி வன்னியசிங்கம் சென்னை சென்று பிரபல எதிர்க் கட்சித் தலைவர்களையும், காங்கிரஸ் தலைவர்களையும், தி. மு. க. தமிழரசுக் கழகம் ஆகிய அமைப்புகளின் தலைவர்களையும், பிரபல பத்திரிகைகளின் ஆசிரியர்களையும் சந்தித்தார். அத்தோடு அவர் சென்னையில் சில பொதுக்கூட்டங்களிலும் இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் நிலைபற்றி சொற்பொழிவாற்றியிருந்தார். இதன் பின்னர் சேர் விஜயரத்ன பல தடவைகளில் சென்னை சென்று 'அங்குள்ள அரசியல் நிலைமையையும், அரசியல் கட்சிகளின் அபிப்பிராயங்களையும், சார்புகளையும், அவற்றின் செல்வாக்கு நிலைமைகளையும்பற்றி அந்தரங்கமாக ஆராய்ந்தார் என்றும் அதன் பின்னரே பிரஸ்தாப எச்சரிக்கை அறிக்கை பிரதமர் பண்டாரநாயகாவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது என்றும் நமக்கு கிடைத்திருக்கும் தகவல் மேலும் தெரிவிக்கிறது.

சேர் விஜயரத்ன பிரதமர் பண்டாரநாயகாவிற்கு அனுப்பியிருக்கும் அந்தரங்க அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளாராம்;

"பெடரல் கட்சியின் நடவடிக்கைகளைப்பற்றியும், அதன் வெளிநாட்டுத் தொடர்புகளைப்பற்றியும் இலங்கை அரசாங்கம் எச்சரிக்கையோடு இருக்கவேண்டும். அவர்களுடைய போக்கை அலட்சியப்படுத்துவது ஆபத்தாக முடியலாம் தென்னிந்தியாவைப் பொறுத்தவரையில் பெடரல் கட்சியின் செல்வாக்கு வளர்ந்து வருவதாகத் தெரிகிறது. இங்கு வாழும் தமிழ் மக்கள் பெடரல் கட்சித் தலைவர்களை மிகவும் மதித்துவருகிறார்கள். பெடரல் கட்சிக்கும் தென்னிந்தியாவிலுள்ள பல அரசியல் கட்சிகளுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருந்து வருவதாகத் தெரிகிறது. இத்தொடர்பு பெரும்பாலும் இங்குள்ள எதிர்க் கட்சிகளுடனேயே இருந்து வருகிறது.

**"எதிர்வரும் பொதுத் தேர்தலில் தென் இந்தியாவில்—குறிப்பாகத் தமிழ் நாட்டில்—காங்கிரஸ் கட்சி ஆட்டங் கண்டுவிடலாம் என்று நம்ப இடமிருக்கிறது. எதிர்க் கட்சிகள் ஆதிக்கத்திற்கு வந்தால் அதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. அவ்வளவுதூரம் காங்கிரஸின் செல்வாக்கு குறைந்து வருகிறது. திராவிட முன்னேற்றக் கழகம் என்று ஒரு அரசியல் ஸ்தாபனம் பெருந்தொகையான ஸ்தாபனங்களுக்குப் போட்டியிடுவதென்று முடிவு செய்திருப்பதோடு பெருமளவில் பிரசாரமும் செய்து வருகிறது.** இந்த ஸ்தாபனத்துடனும் இதுபோன்ற வேறு பல எதிர்க்கட்சிகளுடனும் பெடரல் கட்சியார் நெருங்கிய தொடர்பு பூண்டுள்ளார்கள். இவற்றுள் திராவிட முன்னேற்றக் கழகத்தாருக்கு நாட்டின் பலபாகங்களிலும் செல்வாக்கு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது இக்கட்சியோ அன்றி மற்றும் எதிர்கட்சிகளோ ஆட்சிக்கு வந்தால் இவற்றோடு இலங்கை பெடரல் கட்சியார் கொண்டுள்ள தொடர்பு இலங்கைக்கு சங்கடத்தை விளைவிக்கலாம். எனவே இந்தப்பெடரல்கட்சியாரின் வெளிநாட்டுத் தொடர்புகள்பற்றி இலங்கை அரசாங்கம் விழிப்போடும் எச்சரிக்கையோடும் இருக்கவேண்டும்.

★

6-ம் பக்கத் தொடர்ச்சி

நேசமும் பாசமும் காஷ்மீரப் பிரதமரின் பேச்சிலிருப்பது உண்மை—நேருவே எமது பிதாமகன் என்பதும் உண்டு—இதெல்லாம் வாய் அளவில்! செயலளவிலோ, தனிநாடு!! எனினும் சேர்த்துப் பேசுகிருர், கவர்னர் திவாகர்—அதன் மூலம் திராவிடமாவது ஆரியமாவது எனும் வாதத்துக்குப் பதில் அளித்தது போலக் கருதிக்கொண்டு.

திராவிடம், ஆரியம் என்று நாம் பேசுவதேன், என்னகாரணத்தால் அப்பேச்சுத் தென்னகத்தில்இருக்கிறது எனும் உண்மையை ஓரளவு புரிந்து கொண்டே சென்றுள்ளார் எனத் தெரிகிறது. அவர் கூறுகிருர்,

“புராதன பழக்கப்படி, கல்வி கற்கும் வாய்ப்பு பார்ப்பனக் குழந்தைகளுக்கே கிடைத்தது—சின்னஞ்சிறு வயதிலேயே அவர்கள் படித்தார்கள். பிரிட்டிஷார் வந்ததும், தமதுவேலைக்குத் தகுதியானவர்கள் வேண்டுமென விரும்பியதும், பார்ப்பனர்களுக்கே அந்த வாய்ப்புக்கிடைத்தது — பல இடங்களிலும் அமர்ந்தார்கள். அதனுல் கல்வியின் பயனைப் பெற மற்றவர்களும் ஆசை கொண்டார்கள். இது இயற்கையும் நியாயமும் தானே......”

சாஸ்திரத்தாலும், பிறகு சந்தர்ப்பத்தாலும் நாட்டில் ஒரு கூட்டம் நலம்பல பெற்றது. நலிந்து வாழ்ந்த பெருங்கூட்டம், விழித்துக் கொண்டு,இழந்த தன்உரிமையைப் பெறப் போராடுகிறது. அதன் காரணமாக, சீரழித்த சிறு கூட்டத்தின் அம்புருதூணியை அக்குவேறு ஆணிவேருகப் பிரித்து, காரணத்தைக்கண்டறிந்து, கலன் நீக்கி புதுமாளிகை அமைக்கப் போராடுகிறது! அதன் காரணமாக, ஒருபோது தன்மொழியில் பெற்றிருந்த பெயரினை நாட்டுக்குச் சூட்டி, திராவிடநாடு, திராவிடநாடு என்று உரைக்கிறது!! இதனைத் திவாகர் தெரிந்து கொள்ளாததாலேயே, பேத மூட்டமட்டுமே ‘திராவிடம்’ பயன்படுத்தப்படுவதாகக் கருதுகிருர். அதுபோன்ற கருத்துடன் உலவுவோர் பலருண்டு இங்கே! அவர்களுக்கு, தி.மு.க.வை விரும்பாத பிரகாசா, இங்கிருந்து செல்லும்போது கூறிச்சென்றிருக்கும்வாசகங்களைப் படைக்கிருேம்—உணர்ந்து பார்மின்! உண்மையை அறிமின்!

★

# மறைந்த இராஜரத்னம்

“யார் எவ்வளவு முயன்ருலும் சரி, நாதசுரத்தில் மட்டும் தேர்ச்சி பெற முடியாது. ஏனெனில் அது நம்முடைய இசை” என்று பூரிப்போடு, சொல்வார் மறைந்த கலையரசர். நமது இசையும் வாழ்வும், பிறரால் கைகொள்ளப்பட்டும் இன்னும் ‘அவாள்’ புகமுடியாதவாறு இருப்பது நாதசுரத்துறை மட்டுமேயாகும்! அதனுலேயே, ஆட்டத் துறையிலும் இசைத்துறையிலும் ஏராளமானேர் முன்வந்து பயின்றும், இன்னும் நாதசுரத் துறையில் மட்டும புகவில்லை. காரணம், இத்துறை இலேசானதல்ல. பயிற்சியும், சாதகமும் மிகமிக அதிகம் வேண்டும். நாதசுரத்தில்பெயர் எடுப்பது என்பது அவ்வளவு இலேசானதல்ல. ஆனுல் நமது கலை மன்னரோ, தனது குழலில் கொஞ்சும் வீணையையும்மிஞ்சுவார், நெஞ்சை அள்ளும் ராகங்களையும் வாசித்துக் காட்டிடுவார். அவருடையகச்சேரி என்ருல் பாமர மக்கள்கூட ஏராளமாகக்கூடி நின்று மயங்கிக்கிடப்பர். எவரெவரோ இசைக்கூடங்களையும், அகாடமிகளையும் நிரப்பிக்கிடக்கும் இக்காலத்தில் அவர்கள் எல்லாம் கண்டு மிரளுமளவுக்கு அந்த வட்டாரத்தில் பவனி வந்தவர், நமது இராஜரத்னம். காலஞ்சென்ற திருமருகல் நடேசப்பிள்ளை அவர்களின் தங்கை மகன் இவர். தந்தை குப்புசாமிப் பிள்ளையும் திருமருகலாரைப்போல ஒரு நாதசுரக்காரர்தான். 1898-ம் ஆண்டு ஆவணித்திங்கள் 12 ஆம் தேதிபிறந்தார் இவர். தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவாவடுதுறையில் வளர்ந்தார். இசைவேளாளர் மரபு எப்போதுமேகலையையும்,இசையையுமே நம்பி வாழ்ந்துவருவதாகும். நாட்டிய போதகர்களும், நல்லிசை வல்லுநர்களும் நிரம்பிய அந்த வகுப்பில் பிறந்த இராஜரத்னம் சிறுவயதில் தன பாட்டனரிடம் சிட்சைபெற்று, பிறகு திருக்கோடிக்காவல் பிடில் கிருஷ்ணய்யர், மார்க்கண்டம் பிள்ளை முதலியோரிடம் இசை பயின்று வளர்ந்தார். இராஜரத்னம் அவர்கள் நாதசுரதகில் மட்டுமல்ல, வாய்ப்பாட்டிலும் தேர்ச்சிமிக்கவர். கவி காளமேகம் படத்தில் அவர் பாடிய பாடல்களைக் கேட்டோர் இப்போதும் மயங்கி இன்புறுவர். சன்னமாக சாரீரத்தை ஒடுக்கி, அதன் மூலம் அற்புதச் சித்துக்களையெல்லாம் செய்து காட்டும் திறன்கொண்ட அவர், அவைகளையெல்லாம் நாதசுரத்தில் செய்து காட்டினுர். கையில் குழலெடுத்து வாசிக்க ஆரம்பித்துவிட்டாலே கேட்கும் கம்பீரத்தொனியின் வகையே அலாதியானது. அதனை இனி எங்கே கேட்கப்போருேம் என்று எண்ணும்போதுதான், துக்கம் பலமடங்காகிறது.

இசைவேந்தரின் மறைவை எண்ண எண்ண துக்கம் மேலும் மேலும் அதிகமாகிறது நமக்கு. இசைக்குல சமூகமே இன்று தேம்பி அழும். அவர்கள் அனைவருக்கும் ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக இருந்தார் நமது இராஜரத்னம்! அவருக்குப்பின்...? ஐயம் குடைந்தாலும் அத்துறையில் தேர்ச்சிபெற்று வரும் பல நண்பர்கள் உள்ளார்கள். தமிழ் மண்ணின் தனிக்கலையான அதனை வளர்ப்பதுதான், அவர்கள், மறைந்த மன்னருக்குச் செய்யும் மரியாதையாகும். மக்களின் தூதர்களாக விளங்கும் நாம், இனிமேலாவது நமது ஒளி மணிகள் உலகெங்கும் பிரகாசிக்கும் வழிவகைகளைச் செய்வதுதான், நாம் அவருக்குக் காட்டும் நன்றியாகும். எவ்வளவுதான் அழுதாலும், கண்ணீர் வடித்தாலும், ஏக்கத்துடனேயே திகைத்தாலும் இனி இராஜரத்னம் அவர்களைக் காணப்போவதுமில்லை! அந்த ஒலியைக் கேட்கப்போவதுமில்லை! நினைக்கும்போது, நெஞ்சு குழம்பத்தான் செய்கிறது. குடும்பத்தாருக்கு, என்ன ஆறுதல் கூறுவது—கண்ணீர்தான் வருகிறது. ஏற்பட்ட இழப்பு, சாதாரணமானதல்ல! தமிழகத்துக்கும், குறிப்பாக நமக்கும் மிகமிகப் பெரிய நஷ்டமாகும்—ஒரு நல்ல நண்பரை இழந்தோம், நம் மீது பற்றுகொண்டிருந்த குடும்பத்து மணியை இழந்தோம், இனி... என்றெண்ணி ஏங்குகிருேம். விழிகள் குளமாகின்றன! வேதனை அதிகமாகிறது!!

— அரங்கண்ணல்

ஆண்டுகளில் முடிவான திட்டத்தோடு சென்னை, மைசூர், (ஆந்திரா) ஐதராபாத் மாநிலங்களுக்கு தேக்கப்படும் நீர் பயன்படும் வகையில் நீர்த்தேக்கம் அமைய ஏற்பாடாயிற்று.

மல்லாபுரத்துக் கருகில் துங்கபத்திரா சாந்தூர் மலைச்சாரல்களுக்கிடையே பாய்ந்து ஓடி வருகின்றது. அவ்விடைவெளியை 6007-அடி நீளமுள்ள அணைகட்டி தடுப்பதன் மூலம் மற்றைய இரு பகுதிகளிலும் இயற்கையரணாக மலைச்சாரல் அமைந்துவிடுகின்றது. அந்த இடைப் பகுதியில் சற்றேறத்தாழ 1,32,700 மில்லியன் கன அடி தண்ணீர் தேக்கப்பட வழியேற்பட்டுள்ளது. தேக்கப்பட்ட தண்ணீரை இரு பெரும் கால்வாய்களின் வழியே பாசனத்திற்கு விடப்படுகின்றது. அந்த இரு கால்வாய்களில் ஒன்று ஆந்திரா மைசூர் பகுதியில் 247-மைல் நீளத்திற்கும் மற்றொன்று ஐதராபாத் பகுதியில் 141-மைல் நீளத்திற்கும் வெட்டப்பட்டுள்ளது. உலகிலேயே மிகப்பெரும் அணைகளில் ஒன்றான துங்கபத்திரா அணையைக்கட்ட நாளுக்கு40,000க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உழைத்து வருகின்றனர்.

இதில் மற்றொரு குறிப்பிடத்தக்கது யாதெனில் இந்த அணைகட்ட தேவைப்படும் இரும்பு, எஃகு, மரக்கருவிகள் துணைப்பொருள்கள் யாவும் அணைக்கருகில் உள்ள துங்கபத்திரா தொழிற்சாலையிலேயே செய்யப்படுகின்றன. இந்திய உபகண்டத்திலேயே இத்தகையதொரு சிறந்த தொழிற்சாலை இல்லை எனலாம். அணையிலின்றும் தண்ணீரை வெளிவிடும் மதகுக் கதவின் நீளம் மாத்திரம் 60-அடியாகும். அந்த மதகுக் கதவும் அதோடன்றி மிகவும் முக்கியமான ஷட்டர்கள், எஃகுக் குழாய்கள், பென்ஸ்டாக் குழாய்கள் யாவுமேஇத் தொழிற்சாலையில் தான் செய்யப்படுகின்றன.

60-கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் இந்த அணைத்திட்டம் 2,20,000 டன்கள் அதிகம் உணவு உற்பத்தி செய்யப் பயன்படுவதோடு 72,000 கிலோவாட்கள் மின் விசையை ஆந்திரா மைசூர்ப் பகுதியிலும் 75,000 கிலோவாட்கள் மின்விசையை ஐதராபாத் பகுதியிலும் உற்பத்தி செய்யப் பயன்படுகின்றது.

இந்த நீர்த்தேக்கத்தின் தடுப்புச் சுவர் உயரம் மட்டும் 160-அடியாகும். சுமார் 6007-அடி நீளமுள்ள அணையில் 2300 அடி தூரத்தில் 60-அடி நீளமும் 20-அடி உயரமும் உள்ள கண்மாய்கள் 33 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. அணையில் தேக்கப்பட்டிருக்கும் தண்ணீர் 146-சதுர மைல் பரப்பளவில் கடல்போன்று காட்சியளிக்கிறது.

## கால்வாய்த் திட்டம்

அணையில் தேங்கியிருக்கும் தண்ணீர் இருபெரும் கால்வாய்களின் மூலம் விடப்படுவதாக குறிப்பிடப்பட்டது. இவ்விரண்டிற்கும் முறையே கீழ்மட்ட கால்வாய், மேல்மட்ட கால்வாய் என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த இரு கால்வாய்களும் சேர்ந்து ஆந்திரா மைசூர் பகுதியில் 900000 ஏக்கராக்களும் ஐதராபாத் பகுதியில் 11,00000 ஏக்கராக்களும் சாகுபடி செய்ய போதுமான தண்ணீர் பாய வசதி செய்யப்பட்டுள்ளது. ஆந்திரா மைசூர் பகுதியில் அமைந்திருக்கும் கீழ்மட்டக் கால்வாய் 247 மைல்கள் பெரிய கண்மாய்களின் மூலமும் 1721-மைல்கள் சிறிய கண்மாய்களின் மூலமும் தண்ணீரை சமவெளி பகுதிகளுக்கு வழங்கி வருகின்றது. இக்கால்வாய் நீர் அணையினின்றும் விடப்படும் இடத்திலிருந்து 15-மைல்கள் வரை இயற்கையான பள்ளத்தை நோக்கி விரைந்து, குண்டலகேரி வங்கா என்றழைக்கப்படும் இடத்தில் சமநிலை நிலப்பகுதியை அடைகின்றது. நீர் தேக்கத்திலிருந்து விடப்படும் நீர் குண்டலகேரியை அடையும் வரையில் உள்ள 15-மைல்களுக்கிடையேயுள்ள கால்வாய் 72-அடி அகலத்தில் 8½அடி ஆழத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது. இந்த கால்வாயில் தண்ணீர் 1800கியூசெக்குகள் ஒரேநேரத்தில் பாய்கின்றமையால் அவ்வோட்டத்தைக் கொண்டு நீர் மின்விசை உற்பத்தி செய்யும் அளவுக்கு வேகமாகப் பாய்வதற்கு வேண்டி மலைச்சரிவுகள் வழியே பாயச் செய்து, ஒரு பகுதியில் மலைக்குள் 1500-அடி நீளமுள்ள குகை அமைத்து அதன் மூலம் தண்ணீரைப்பாயவிட்டுள்ளார்கள். இது தென்னாட்டு பொறியியற் கலையின் சிறப்புக்கோர் எடுத்துக்காட்டாகும்.

அடுத்து கீழ்மட்டக் கால்வாய்க்கு 35 அடி உயரத்திற்கு மேல் கட்டப்பட்டிருக்கும் மேல்மட்டக் கால்வாய் குறிப்பிடத்தக்கதாகும். இந்தக் கால்வாய் குண்டக்கல் வழியே தாடுபத்ரி, புலிவைன்டிலா வரை பாய்ந்து பெண்ணாற்றில் கலக்கும் வகையில் அமைந்துள்ளது. ஐதராபாத் பகுதியில் செல்லும் கால்வாய் சுமார் 1000 மைல்கள் பெரிய சிறிய கண்மாய்களின்மூலம் தண்ணீரை பாசனத்திற்கு விடுகின்றது. இக்கால்வாய் ஓடும் 19 மைல்களும் மிகவும் கரடு முரடான மலைப்பகுதியாகும். இக்கால்வாய் சீரும் சிறப்புமாய்த் திகழ்ந்த விஜயநகர சாம்ராஜ்ய சரித்திரச் சின்னங்களினூடே பாய்வதாகும். கான்கிரீட், ஷாபாத் கற்களால் பாவப்பட்டு அமைக்கப்பட்டுள்ள இந்த ஐதராபாத் கால்வாய் இருபத்துநான்காவது மைலிலிருந்து நூற்று இருபத்து ஏழாவது மைல் அதாவது ரெய்ச்சூர் வரை படகுப் போக்குவரத்துக்கு பயன்படும் வகையில் அமைக்கப்பட்டிருக்கின்றது. ஏறத்தாழ 10,80,000 ஏக்கராக்கள் ஐதராபாத் பகுதியில் சாகுபடிக்கு பயன்படும் வகையில் பாய்கின்றது.

துங்கபத்ரா நீர்த்தேக்கத்தின் மூலம் சாகுபடிக்கு வரும் நிலப் பரப்பு:-

| | | | |
|---|---|---|---|
| ஆந்திரா மைசூர் மாநிலங்களில் | நெல் சாகுபடி (இருபோகம்) | 55376 | ஏக்கரா |
| | பருத்தி, மணிலா, மில்லட்ஸ் | 177793 | " |
| | கரும்பு, தோட்டப் பயிர் | 15333 | " |
| ஐதராதாத் மாநிலத்தில் | நெல் சாகுபடி | 50000 | ஏக்கரா |
| | கரும்பு | 15000 | " |
| | பருவப் பயிர்கள் | 200000 | " |
| | பருத்தி, சோளம், புஞ்சைப் பயிர் | 285000 | " |
| | தோட்டப்பயிர் சாகுபடி | 30000 | " |
| | மொத்தம் | 8,28,502 | ஏக்கரா |

### மின்விசை உற்பத்தி

இவற்றோடின்றி, துங்கபத்திரா அணையினின்றும் நீர் வெளிவிடப்படுமிடத்தில் மின்விசை உற்பத்தி செய்யப்படுகின்றது. தற்போது ஆந்திரா மைசூர் பகுதியில் 9000 கிலோ வாட்கள் நீர் மின்விசை உற்பத்தி செய்யும் மின்விசை நிலையம் அமைந்துள்ளது. சின்னாட்களில் அதே அளவுள்ள மற்றோர் மின்சக்தி நிலையம் அமையவிருக்கின்றது.

கால்வாய்த் திட்டத்தின் 15 மைல் தொலைவில் அமைக்கப்பட்டிருக்கும் மின்விசை நிலையம் 18000 கிலோ வாட்கள் மின்விசை உற்பத்தி செய்யும். இந்த மின்விசை நிலையங்களில் உற்பத்தியாகும் மின்விசை முதலில் 11000 வாட்கள் டிரான்ஸ்பாமர்கள்மூலமும் பின்பு 66000 வாட்கள் டிரான்ஸ்பாமர்கள் மூலமும் மின்சக்தியை வரண்ட இராயலசீமைப் பகுதியான பெல்லாரி, அனந்தபூர், கர்னூல், கடப்பை மாவட்டங்களில் உள்ள 12 உபமின்சக்தி நிலையங்களுக்கு உபயோகத்திற்கு அனுப்ப வசதியுள்ளது.

ஐதராபாத் பகுதியில் அமைந்துள்ள மின்சக்தி நிலையம், அணைக்கருகிலேயே 9000 கிலோவாட்கள் உற்பத்தி செய்யும் நான்கு மின்விசை உற்பத்தி நிலையங்களின் மூலம் 36000 கி. வா. மின்சக்தி உற்பத்தி செய்யும். இம்மின்சக்தி நிலையங்கள் முதலில் 11000 வாட்கள் டிரான்பாமர்கள்மூலமும் சில நாட்களுக்குப் பிறகு 1,32,000 வாட்கள் டிரான்ஸ்பாமர்கள் மூலமும் மின்சக்தியை ரெய்ச்சூர், குல்பர்கா மெகபூப் நகர் மாவட்டங்களில் உள்ள 8 மின்சக்தி உபநிலையங்களுக்கு உபயோகத்திற்கு மின்சக்தியை சப்ளை செய்யும்.

இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் மின்சக்தி ஆந்திரா, மைசூர், ஐதராபாத்மாநிலங்களில்புதைந்து கிடக்கும் கனிப் பொருள்களை எடுக்கவும், அவற்றைக்கொண்டு பெரும் கனரகத் தொழில்கள் அமைக்கவும், தற்போது நிலக்கரி இல்லை என்ற காரணத்தால் நசித்துக் கிடக்கும் ஆலைகளை இயக்கவும், சர்க்கரை, புகையிலை ஆலைகள் பல புதியனவாக நிறுவவும், வரண்ட பகுதிகளை பம்புசெட்டுகள் மூலம் வளமாக்கவும், சிமெண்ட், பெயிண்ட் துணி ஆலைகள் அமைக்கவும் பயன்படுத்தப்படலாம். இதன் மூலம் தென்னாடு—திராவிடம்—வளம்பல கொண்ட சிறந்த பொன்னாடாகும் வாய்ப்புகள் ஏராளமாய் உள்ளன என்றால் வியப்பேது?

★


# ‘திராவிடநாடு’ பொங்கல் மலர்

சிந்தனைச் செல்வங்கள் — அறிவுலகக் கட்டுரைகள்

சிறுகதைகள் — ஓவியங்கள்

**புதுமை விருந்து !** ★ **அரிய படைப்பு !!**

மூவர்ண முகப்பு 120-பக்கங்கள்

**விலை 1--8--0**

**இந்த ஆண்டு பொங்கல் மலர் மிகச்சிறந்ததாக விளங்கும்**

ஏஜண்டுகளிடம் இப்போதே உங்கள் பிரதிகளுக்கு ஏற்பாடு செய்துகொள்ளுங்கள். தபால்மூலம் சந்தாதாரர்களுக்கு மட்டுமே அனுப்பப்படும்.

**ஏஜண்டுகள்:**—வேண்டிய பிரதிகளின் எண்ணிக்கை விபரத்தை 20—12—56க்குள் தெரிவிக்கவேண்டும். 25—12—56க்குள் கழிவு நீக்கிய **முன் பணம்** முழுவதும் அனுப்பவேண்டும். முன்பணமின்றி மலர்கள் அனுப்பப்படமாட்டாது.

**சந்தாதாரர்கள்:**—ரூ. 1—8—0 முன்னதாகவே அனுப்பிப் பதிவுசெய்துகொள்ளவும். மலரைப் பதிவுத் தபால் மூலம் பெற விரும்புவோர் ரூ. 1—15—0 அனுப்பவும்.